திராவிடநாடு

2–10–60 | வார வெளியீடு | விலை 16 காசு

சிந்தை நோகும்!

"முத்து"

அங்கே,

ஆறுள்ள இடமெல்லாம் அணைகள்! தேக்கம்!
அணுவுக்கு உலையதுவும் வடக்கே உண்டு!
நீருள்ள இடமெல்லாம் மின்சக்தி நிலையம்!
நிலையான பெருந்தொழில்கள்! உரத்துக்கு ஆலை!

பாருக்குக் காட்டுதற்குப் பக்ரா ஒருநங்கல்!
பண்பட்ட வயற்புனங்கள்! பாங்கான பாதை!
நேருவுள்ள மாநிலத்தில் நின்றவிடம் பசுமை!
நல்லகனிச் சுரங்கங்கள் அகழ்கின்ற காட்சி!

விண்முட்டும் புகைபோக்கி வியப்பூட்டும் வகையில்!
விதவிதமாய்ச் சிறுதொழில்கள்! விரிவான திட்டம்!
கண்கட்டு வித்தையென பாலையெலாம் பச்சைமயம்!
கண்டுவந்தோர் ஏத்துகிறார் ஐந்தாண்டுத் திட்டம்!

இங்கோ ?!

கந்தைக்கும் வழியில்லை! கழனிக்கும் நீரில்லை!
குந்துதற்கும் 'கூடி'ல்லை! நடைபாதைத் திருவாசம்!
முந்திமுந்தி உலகுக்கு மொழிவகுத்த திருக்கூட்டம்!
முறையிடவும் வக்கின்றி முடங்குகின்ற கோலம்!

சிங்களத்தின் கரையோரம் செந்தமிழர் கூட்டம்!
திருநாட்டின் புகழ்பாடப் படைகொண்டு அல்ல!
தங்களின மரபெல்லாம் பின்னடைந்து போக
பொங்குரிமைக் கொடுமையினால் உயிரிழந்த கூட்டம்!

இருண்ட கண்டத்தில் புதிய ஒளி!

★ —(அ. அரசிளங்கோ)— ★

உலக மக்களால் 'இருண்ட கண்டம்' என்று வர்ணிக்கப்பெற்ற ஆப்ரிக்கா கண்டம் இப்பொழுது சுதந்திர வேட்கையால் உந்தப்பட்டு நாளுக்கு நாள் புதிய புதிய நாடுகள், பிரஞ்சு, ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலைப் பெற்று வருகின்றது. பத்தாண்டுகளுக்கு முன்னர் முதன் முதலாக ஆப்ரிக்கா கண்டத்தில் நான்கே நான்கு நாடுகள்தான் சுதந்திரமாக இருந்தன. (எகிப்து, எதியோபியா, தென் ஆப்ரிக்கா, லிபீரியா) ஆனால், இப்பொழுதோ அந்த வரிசை பத்தாக உயர்ந்துள்ளது. இன்னும் சில நாட்களில் அந் நாடுகளின் தொடர்ச்சி இருபத்தாறு ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காரணம், மக்களுடைய சுதந்திர தாகம் கொழுந்துவிட்ட தீயென எரிகிறது. அணைக்க முயலுகிறார்கள் ஆதிக்கக்காரர்கள். எவ்வளவு நாட்களுக்கு ஆதிக்கம் செலுத்தமுடியும்? என்றாவது ஒருநாள் மக்கள் சக்தி முன்னால் இவர்கள் பணிந்தேயாக வேண்டுமல்லவா?

சமீபகால உலக நிகழ்ச்சிகளில் ஆப்ரிக்கா கண்டத்தில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் முக்கிய நிகழ்ச்சிகளாகும். 1957-ம் ஆண்டுக் கணக்குப்படி ஆப்ரிக்கா கண்டத்தில் 117 இலட்சம் சதுர மைல் பரப்பில் 22½ கோடி மக்கள் வாழ்கின்றார்கள். 1951-ம் ஆண்டிலிருந்து 116 இலட்சம் மக்களைக்கொண்ட 24 நாடுகள் தன்னுரிமை பெற்றுத் தனி கொடியுடன் உலக அரங்கில் தனி நாடுகளாகக் காட்சியளிக்கின்றன. கீழ் வரும் நாடுகள் சுதந்திரம் பெற்றவை. அவற்றில் சில இவ்வாண்டு இறுதிக்குள் விடுதலை பெறக் கூடியவைகளாகும்.

நாடுகள்.	பரப்பு. (ச. மைல்)	மக்கள் தொ. (இலட்.)
சோமாலியா	2,88,000	19
லிபியா	8,10,000	11
எதியோப்பியா	48,000	10
சூடான்	9,77,000	102
டுனிசியா	45,000	38
மொராக்கோ	1,73,000	100
கனா	92,000	48
நைஜீரியா	3,39,000	350
சிரெலியோன்	28,000	19
கினியா	97,000	25
காமரூன்	1,43,000	32
டோகோலாண்டு	23,000	11
மாலிசமஷ்டி	6,60,000	66
ஒல்டா	1,00,000	33
டகோமி	47,000	17
ஐவரிகோஸ்ட்	1,89,000	25
நைஜர்	4,84,000	24
சட்	4,88,000	26
கேப்ன்	1,01,000	4
காங்கோ (பிரஞ்சு)	1,30,000	8
சென்டிரல் ஆப்ரிக்கன் குடியரசு	2,34,000	15
மௌரிடேனியா	3,22,000	6
மலகாச்சி	2,28,000	52
காங்கோ (பெல்சியம்)	9,06,000	137

இவற்றில் ஒன்றுதான் 'கோல்டு கோஸ்ட்' என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டு வந்த கனா நாடாகும். இதன் பரப்பு 92000 சதுர மைலாகும். 1960-ம் ஆண்டின் கணக்குப்படி மக்கள் தொகை 66,93,730. இது ஒரு தொன்று தொட்டு நாகரிகம் உலாவிய நாடு. ஒரு காலத்தில் திராவிடம்போல் செல்வமும் சீரும்சிறப்பும்பெற்றுத் தரணியில் தனக்கு நிகரில்லை என்று சொல்லும்படியாகக் கோட்டையில் கொடி கட்டி ஆண்ட நாடாகும். இடைக்காலத்தில் துவண்டு விழுந்தது. கி. பி. 3-ம் நூற்றாண்டு முதல் 13-ம் நூற்றாண்டு வரை ஆப்ரிக்காவில் கலங்கரை விளக்காக விளங்கியது. தங்கத்தை வாணிபப் பொருளாக வைத்து வாணிபம் நடத்திய நாடுகளில் கனாவும் ஒன்றாகும். முகமதியர்களின் படையெடுப்பின் காரணமாக அந்நாட்டின் மீது சோகத்தின் சாயல் படர்ந்தது. அதன் விளைவு அழிவென்னும் குழிக்குள் ஆழ்ந்தது. பின்னர் நாடு பிடிப்பில் ஆசைகொண்ட போர்ச்சுகீசியர் முதன்முதலாகக் கனாவின் மேற்குப் பகுதியை அடைந்து தங்கள் வர்த்தகத்திற்கு அடித்தளமாக 1482-ல் ஒரு கோட்டையை அங்கு எழுப்பினார்கள். இதற்குப்பின், வந்தவர்களுக்கெல்லாம் வாழ்வு அளித்த திராவிடம்போல, ஆங்கிலேயர், டச்சுக்காரர், சுவிடன் நாட்டார் ஆகியோர் தொடர்ச்சியாக அங்கு வந்து குடியேறினார்கள். அவர்களை எல்லாம் கனா மறுக்காமல் ஏற்றுக் கொண்டது. இவர்களுக்குள் வர்த்தகப்போட்டி ஏற்பட்டுக்கடைசியில் ஆங்கிலேயர், ஐரோப்பிய கோட்டைக்குள் அனைத்தையும் தங்கள் ஆதிக்கத்திற்குள் அடக்கிக்கொண்டனர்.

இதை இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேய அரசு 1821-ல் வர்த்தகர்களிடமிருந்து தனது பொறுப்பில் ஏற்றுக்கொண்டது. இதே நேரத்தில் ஆப்பிரிக்காவின மேற்குப் பகுதி மாநிலங்கள் எல்லாம் கூட்டாட்சியை ஏற்படுத்திச் செழிப்புடன் வளர்ந்தன. அம்மாநிலங்

(4-ம் பக்கம் பார்க்க)

"இரத்தம் கொதிக்கிறது"

லர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (2–10–60) தனிப் பிரதி 16-காசு [இதழ்

வரலாற்று ஆதாரங்களைக் காட்டி, இலக்கியச் சான்றுகளைத் தந்து, நடைமுறைப் பழக்கத்தை விளக்கி, அண்டை அயல் மாநிலங்களைச் சுட்டி, நியாயத்தின் அடிப்படையில், காரணங்கள் ஆயிரம் காட்டி, மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றி, கண்டனக் கூட்டங்கள், கடையடைப்புகள் நடத்தி — மிகமிகச் சாதாரண கோரிக்கை ஒன்றனை நீண்ட நெடுநாட்களுக்கு முன்பே தமிழர்கள்—கட்சிகளைக் கடந்து—ஒன்றுதிரண்டு ஆளவந்தோரிடம் தெரிவித்தனர். ஆகாததையோ, ஆபத்தானதையோ, அடுக்காததையோ அந்தக் கோரிக்கை தெரிவிக்கவில்லை. முடியாததை முன்னிறுத்திப் போராடவில்லை. எளிதாக முடியக்கூடியது. ஆனால் எல்லாருக்கும் ஏற்றது, தேவையானது — விரும்பியது — ஆசையாக எதிர்பார்த்து ஏங்குவது. அதை நிறைவேற்றித்தர நிதிக்கு என்ன செய்வது என்றும் ஆளவந்தார்கள் ஆயாசப்படத் தேவையில்லை. கால்காசு செலவு இல்லாமலே "ஆகட்டும்" என்று தலையசைத்து முடித்துவைக்கக்கூடிய கோரிக்கைதான். சென்னை மாநிலம் என்று இருப்பதைத் தமிழ்நாடு என்று மாற்ற வேண்டும்—இதற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கி, மேலிடத்து அனுமதியை எதிர்பார்த்து, சிக்கல் பலவற்றைத் தீர்த்து ஆர அமர நின்று நிதானித்துச் செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. 'சரி' என்றால் போதும். ஆனால் ஏனோ நமது மாநிலத்தில் உள்ள அமைச்சர்களுக்கு இன்னும் மனம் இரங்கவில்லை! 'நாங்களும் தமிழர்கள்தானே' என்று சில நேரங்களில் நெஞ்சை நிமிர்த்திக் கேட்கின்றனர், ஆமாம்! ஆனால் செயலில் அப்படித் தெரியக்காணோம்.

மிகமிகச் சாதாரண கோரிக்கை; இதற்காகத் தமிழர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எத்தனையோ! தனித்தனியே ஒவ்வொரு கட்சியின் குரலும் ஒலித்தது; சேர்ந்தும் ஒலித்தது. ஆனாலும் ஆளவந்தோர் அசைந்துகொடுக்கவில்லை.

அண்மையில் சென்னை மாநகராட்சி மன்றம் 'சென்னையைத் தமிழ்நாடு என்று அழைக்கவேண்டும்' எனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது. நாட்டாளவந்தோருக்கு நகரை ஆள வந்துள்ளோர் அறிவுரை கூறவேண்டிய நிலைக்கு அமைச்சர்கள் வந்துவிட்டிருக்கின்றனர்!

இதுமட்டுமா? கட்சிகள் எதிலும் சேராமலும் எதனையும் சேர்க்காமலும் இயங்கிவரும் தமிழகப் புலவர் குழுவும் அண்மையில் சேலத்தில் கூடியபோது சென்னை மாநிலத்தின் பெயரைத் தமிழ்நாடு என மாற்றவேண்டும் என்ற கருத்தை அறிவித்துள்ளது. நகரமன்ற வரவேற்புக்குக் குழுவின் சார்பில் பதில் சொல்லும்போது,

> "சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர்வைக்க ஆளும் கட்சி மறுப்பது கண்டு இரத்தம் கொதிக்கிறது"

என்று டாக்டர். மு. வ. அவர்கள் கூறியுள்ளார். டாக்டரவர்கள் பொறுமைபூண்டு ஆறி அமையும் பெருந்தன்மை படைத்தவர். அந்தச் சான்றோருக்கே இரத்தம்கொதிக்கும் நிலைமை ஆளவந்தார்கள் உண்டுபண்ணுகின்றனர் என்றால் அவர்களைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது?

ஆனால் அவர்களைப்பற்றி நன்குணர்ந்துள்ள இன்னொரு தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் அதே வரவேற்பு நிகழ்ச்சியில் வேறு ஒன்றும் கூறியுள்ளார்.

> "தற்போதாவது அல்லது தேர்தல் நேரத்திலாவது தமிழ் நாடு எனப் பெயரிடப் படலாம் என நம்புகின்றேன்."

என்று அவர் கூறியுள்ளார்.

இதிலிருந்து தேர்தல் ஒன்றுக்குத்தான் இந்த அமைச்சர்களைப் பணிய வைக்கும் ஆற்றல் இருக்கிறது என்பதையும், தேர்தலில் அவர்கள் சில 'செப்படி வித்தை'களைச் செய்து விளையாடுவர் என்பதும் நன்கு புலனாகிறது. அது எப்படியேனும் போகட்டும். தேர்தலை மனத்தில் வைத்தாவது ஆளவந்துள்ளோர் உடனடியாகத் தமிழ் நாடு என்ற பெயர்—மாற்றத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். புலவர் குழுவின் பொன்னுரையை மனத்தில் ஏற்றால் புகழும் கிடைக்கும், "நாங்களும் தமிழ் மக்களே" என்று சொல்வதும் மெய்யாகும்.

இன்றேல்—புலவர்களின் இரத்தம் கொதிப்பது என்னென்ன புரட்சிகளைத் தோற்றுவிக்குமோ, அறியோம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

கள் ஒன்று சேர்ந்து அமைத்த அக்கூட்டாட்சிக்கு அசாந்தி என்று பெயர். இவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் அடிக்கடி போர் நடைபெற்றன. கூட்டாட்சியில் அங்கம் வகிக்கும் நாடுகள் தவிர, மானமற்ற அரசர் சிலர் 'நமக்கு இந்த வீண் வம்பு வேண்டாம்' என்ற எண்ணத்தில் வெள்ளையருடன் பேரங்கொண்டு 1844-ல் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டனர். அன்றுதான் அந்தக் கங்காணிகளால் கனா (தாயின்) கரங்களுக்கு ஆங்கிலேயரின் அடிமை என்னும் இரும்புச் சங்கிலி மாட்டப்பட்டது. அடிமைகொண்ட நாட்டை ஆதிக்க வெறியர்கள் செய்வதுபோல் சட்டங்களும் நீதி முறைகளும் புகுத்தப்பட்டன. ஆங்கிலேய மொழி கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. 1872 முதல் இங்கிலாந்தின் ஒரு காலனி நாடாகத் திகழ்ந்தது. இதனைக் கண்ட அசாந்தி மறவர் சிங்கமெனச் சீறினார்கள். உயிரைத் துரும்பென நினைத்து அஞ்சா நெஞ்சத்துடன் போரிட்டார்கள். ஆனால் தோல்வியே கண்டார்கள். 1900-ல் வெள்ளையரால் கைப்பற்றப்பெற்ற அசாந்தி கூட்டாட்சியே சிதைந்து சின்னாபின்னமாயின. ஆனாலும், இவ்வாறு சிதைந்த நாட்டில் 45 ஆண்டுகளாக அரும்பாடுபட்டுத் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலை நிறுத்தினர். 1924-ஆம் ஆண்டில் வட பகுதி மாநிலங்களையும் பாதுகாவல் உடன்படிக்கையின் மூலம் தங்கள் ஆளுகைக்குக் கொண்டுவந்தார்கள். விடுதலை வீரர்களின் உள்ளம் கொதித்தது. இதன் விளைவாக 1953-ல் தாங்களே முன்னின்று கூட்டாட்சியை நிறுவினர். இதன் ம்ன்னராக இரண்டாம் ரெம்ப்பே என்பார் பதவி ஏற்றார்.

கானாவில் உலகின் விழிப்புணர்ச்சிக்கு ஏற்பத், தன்நாடு, தன்மொழி என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து 1948-ல் பெரும் கிளர்ச்சி செய்தனர். அதன் பயனாக அரசியல் சட்டக் குழு ஒன்று 'சர் ஹென்றி கௌசே' தலைமையில் அமைக்கப்பட்டது. இதற்கிடையில் மேற்படிப்புக்கு மேல் நாடுகளுக்குச் சென்றிருந்த டாக்டர் 'நெக்ரூமா' 1947ல் தாயகம் திரும்பினார். பல நாடுகளின் விடுதலை உணர்ச்சிகள் அவருக்குத் தெரிந்தன. நம்நாடு நமதாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் பணியாற்றிய டாக்டர் டாங்க்வா என்ற அறிஞரின் விடுதலைப் பாசறையில் (ஐக்கிய தங்கக் கடற்கரை சம்மேளனப்) சேர்ந்து நாட்டு மக்களின் உள்ளங்களில் விடுதலை உணர்ச்சியை காட்டுத் தீயெனப் பரப்பினார். கட்சியின் வோட்டு முறையில் நம்பிக்கை இல்லாமல் புதிய கட்சியான (Convention Peoples Party) மக்கள் கட்சியை ஏற்படுத்தினார். 1950-ல் நெக்ரூமா தலைமையில் புதிய அரசியல் சட்டத்தின் குறைகளை எதிர்த்து அவரது இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதைக் கண்டு ஆட்சியினர் அச்சங் கொண்டனர். அதனால் அவரையும் அவரது கட்சியினரையும் அவசரச் சட்டத்தின் கீழ்ச் சிறை செய்தனர். ஆனாலும் விடுதலை வேட்கை தணியவில்லை. 'கௌசே'வின் அரசியல் சட்டத்தைத் தொடர்ந்து நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் கட்சி மகத்தான வெற்றி பெற்றது. சிறையில் தலைவர் இருந்தாலும், மக்கள், விடுதலை விரும்பிகளுக்கே வாக்குரிமைகளை வழங்கினார்கள். 'நெக்ரூமா' சிறையிலிருந்து மீட்கப்பட்டுப் புதிய சட்டமன்றத்தின் தலைமைப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1954-ல் மீண்டும் நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றியைக் கண்டார். பிற்போக்குவாதிகள் தலைகுனிந்து ஓடினார்கள். அகண்ட ஆப்பிரிக்காவின் சட்டமன்றம் அமைக்கப்பட்டது. 'ஆட்சியை (சுதேசிய) மக்களிடம் ஒப்படைக்குமுன் மக்களின் விருப்பத்தை அறியவேண்டும்' என்று ஆங்கிலேய அரசு சொன்னதின் பேரில் 1956-ல் மூன்றாம் தேர்தல் களத்தில் மக்களைச் சந்தித்தார். தாயகம் விடுதலை பெறவேண்டுமா? வேண்டாமா? என்ற வினாவை எழுப்பினார். 104 பேர் கொண்ட கானா சட்டமன்றத்தில் 82 பிரதிநிதிகள் விடுதலை வேண்டும் என்ற மக்களால் அனுப்பப்பட்டனர். இதன் பின்னர், கானாவின் விடுதலைச் சட்டத்தில் ஆங்கிலேய அரசினரால் கையொப்பமிடப்பட்டது.

1844-ஆம் ஆண்டில் மாட்டப்பட்ட அடிமைச் சங்கிலி 113 ஆண்டுகளுக்குப் பின்னர் 1957 மார்ச்சுத் திங்கள் 6-ஆம் நாள் ஓட்டு முறையில் தனியரசு பெற்றது. நம் திராவிட நாட்டின் விடுதலையை ஓட்டு முறையில் வாங்க முடியுமா? என்று கேட்கும் அப்பாவிகளுக்கு இது ஒரு பாடமாகும். கானா நாட்டின் தேசிய இனங்கள், ஆமாம் நண்பர்களே சின்னஞ்சிறு நாட்டில் நான்கு இனங்கள் உள்ளன. (ஃபாண்டி, அசாந்தி, கா, ஏவே) ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்தனி மொழியுண்டு. அரசினரின் மொழி ஆங்கிலேயமாகும். இது ஒரு மதச்சார்பற்ற நாடாகும். இந்த நாட்டின் பொருளாதாரம் விவசாயமேயாகும். கொக்கோ ஏற்றுமதியில் 40 சதவிகிதம் இவ்விடமிருந்துதான் ஏற்றுமதியாகிறது. சுரங்கத் தொழிலும் செழிப்படைந்துள்ளது. அதுமட்டுமின்றி, விடுதலை பெற்ற கானா நாடு மக்களாட்சியை (Republican Form) முறை ஏற்படுத்த முயன்றார்கள். அதன் காரணமாகப் பொதுவாக்கெடுப்பு 1960 மார்ச்சுத் திங்களில் நடைபெற்றது. அதில் மக்களாட்சியை 10,09 962 பேர் ஆதரித்தும் 1 31 693 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். கடந்த சூலைத் திங்கள் முதல் கானா குடியரசாக—இருண்ட கண்டத்தின் ஒளி விளக்காகத் திகழ்கிறது.

★

பிறப்பு

தோழர் கொளத்தூர் கோதண்டத்தின் துணைவியார் தோழியர் பிரபாவதி ஆண் மகவுக்குத் தாயானார்கள்.

காஞ்சீபுரம்

2–10–60.

தம்பி !

புரிகிறது, புரிகிறது, உன் குறும்புப் புன்னகை. எப்படி அண்ணா' எமது திறமை!! தம்பிகள் இருக்கிறார்கள் எதையும் தாங்கிட! அறிவாற்றலிருக்கிறது அவர்களிடம் நிரம்ப; எதனையும் வெற்றியுடன் செய்துமுடிக்க! எனக்கென்ன குறை! எதையும் அவர்களைக்கொண்டே செய்துமுடிப்பேன். என்றெல்லாம்கூறி, நிம்மதியாக, ஓய்வாக, இருந்துவிடலாம் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தாய், பார்த்தனையா, இப்போது, பிடித்திழுத்துவந்து இருக்கையிலே அமர்த்திவிட்டோம், பொதுச் செயலாளராக்கிவிட்டோம்! என்று கேட்கிறாய், குறுநகை மின்னிட. வசமாகச் சிக்கிக்கொண்டுவிட்டேனே, நான். அன்புக் கயிற்றினாலே பிணைத்துவிட்டாய்; நீ ஆட்டிவைக்கிறபடி ஆடித் தீரவேண்டியவனாகி விட்டேன், வேறென்ன முடிகிறது என்றால்... ஆண்டுபல உழைத்தோம், கள்ளமின்றி, உள்ள திறமத்தனையையும் ஒப்படைத்துவிட்டு; நிலைமையிலே மகிழத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இனித், தம்பிகளிலே எவரேனும் ஒருவர், மற்றவர்களின் மகிழ்ச்சி கலந்த ஒத்துழைப்பைப் பெற்றுத், தானையினை நடாத்திச் செல்லவேண்டும் என்று தான், சொன்னேன், 'தவம் கிடந்தேன்' என்றே கூறலாம். ஆனால்...... மீண்டும் 'சுமைதாங்கி'யாக்கப்பட்டுவிட்டேன்!!

விடுவதாக இல்லையே, நீயும் உன்போன்றாரும். குன்றெடுக்கும் நெடுந்தோள் எனக்கு இல்லை, எனினும், என் தோளின்மீது பொறுப்புகளை எடுத்துவைத்துச், சுமந்திடச் சொல்வதிலேயோ, உனக்கோர் தனிச் சுவை ஏற்பட்டுவிடுகிறது; நான் என்ன செய்வேன்? தாங்கிக்கொள்கிறேன். என்னைப் பிடித்திழுத்து இருக்கையிலே அமர்த்துகிறார்களே, ஏனோ நமக்கு இனியும் இந்த இக்கட்டு என்றெண்ணித் தம்பி! நான் இடர்ப்பட்ட நேரத்தில், ஏனண்ணா! வீண் கலக்கம், எழுந்து நில், எம்முடனே!! என்று கூறுவதுபோலத், தம்பிகள் நாவலரும் சம்பத்தும், கருணாநிதியும் மதியும், நடராசனும் அன்பழகனும், சிற்றரசும், எனைச் சுற்றி வளையம் அமைத்துக்கொண்டனர்—என்செய்வேன்!—தப்பி ஓடிடவா முடியும்—உம்! என்று இழுத்தேன், உட்கார்! என்றனர், வேறென்ன செய்ய இயலும்—பொறுப்பேற்றுக்கொண்டேன்! அல்ல! அல்ல! பொறுப்பேற்றுக்கொண்டேன் என்று கூறி விட்டேன்! பொறுப்புகளை நிறைவேற்றிட இயலும் என்பதில் எனக்குத் துளியும் ஐயமில்லை—ஏனெனில்—செயல் வீரர்களாம் என் தம்பிமார்கள், ஒவ்வொருவர்

ஒன்றாகக்கூடி, இன்பத் திராவிடம் தேடி!

ஒவ்வோர் துறையிலே அரசோச்சி, அருந்திறன் காட்டிப் பெறப்போகும் பலன்களை, நாட்டு மக்களைக்கூட்டிக் காட்டி மகிழத்தானே, நான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறேன்! அவர்கள் செய்தளிக்கும் அணிபணியினை, அனைவரும் கண்டுமகிழ, கொண்டுவந்து காட்டிட, நான் 'பொது'ச்செயலாளன் ஆக்கப்பட்டிருக்கிறேன். இதை எண்ணும்போது, முதலில் எழுந்த திகைப்புத் தகர்ந்து, தித்திப்புத் தட்டுகிறது.

தம்பி! அலைகடலில் கிடக்கிறது முத்து. மண்ணடி கிடக்கிறது தங்கம்! பிறகோ, கைத்திறன், தொழில் நுட்பம் பெற்றோரின் கரம் வந்தடைகிறது' பிறிதோர் நாள், மனதை மயக்கும் பருவத்தாளின் மார்பினில் புரள்கிறது, மாலையாகி!!

எங்கெங்கு இருந்த பொருள், 'எவரெவர், எத்தகைய திறம்காட்டிக் கொணர்ந்தனர்—கொண்டுவந்த பின்னர், வண்ணம் வளரத்தக்க வடிவம் பெற்று, ஒன்றுடன் மற்றொன்று பொருத்தமான முறையில் இணைக்கப்பட்டு, பிறகு, இருக்குமிடம் சென்று, எழில் எழிலோடு சேர்ந்துவிடுகிறதல்லவா? அஃதேபோல், பல்வேறு துறைகளிலே, பணிபல புரிந்து, என் தம்பிகள், தேடிக்கொண்டு வந்தளிக்கும், பொன்னும் மணியும், முத்தும் பிறவும், கோர்த்தளித்து, அதனைத் தாயகம் அணிந்து, பெருமிதம் கொண்ட நிலையில் இருந்திடக்கண்டு, மகிழ, நீயும் நானும் இருக்கிறோம். மூழ்கியும் கல்லியும், முறியடித்தும் பகை முடித்தும், அவர்கள் தேடிக்கொண்டுவந்து அளிக்கும் 'செல்வத்தை' நாட்டுக்குக் காட்டி, காணீர்! என்னரும் தம்பிகளின் ஆற்றலை! என்று கூறி மகிழ்ந்திட, நான், ஆம்! ஆம்! கடற்கரைக் கூட்டத்திலேயே, அதனைத்தான் நான் கூறினேன்.. அதற்குத் தடை ஏதும் இல்லை என்றே அவர்தம், முகப்பொலிவும், பொலிவளிக்கும் கண்ணொளியும் காட்டின், மட்டற்றமகிழ்ச்சி.

திராவிட முன்னேற்றக் கழகம், ஈடுபடும் எந்தக் காரியத்தையும், எடுத்துக்காட்டும் எந்தப் பிரச்சினையையும், மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும், நாடு இன்று கூர்ந்துபார்த்து, இதற்கென்ன பொருள்? இது எதைக் காட்டுகிறது? இதற்கு என்ன நோக்கம்? இது எதன் விளைவு?—என்றெல்லாம், ஆராய்ந்திடவும், உரையாடிடவும் காண்கிறோம்.

எங்கோ, எதுவோ, நடந்தது—என்ற முறையில் அல்ல, ஏன், இது, இவ்வண்ணம், இதுபோது, நடைபெற்றது? என்று, நமது ஒவ்வொரு நடவடிக்கையையும், ஏற்படும் ஒவ்வொரு நிலைமையையும், அலசிப் பார்த்திட இன்று, எல்லா அரசியல் கட்சிகளுமே முயற்சிக்கின்றன. அலசிப்பார்த்து உண்மையை, அந்தக் கட்சிகள் கண்டறிந்துவிட்டன, என்று கூறுவதற்கு இல்லை! ஆனால், முயற்சியிலே மட்டும், மும்முரமாக ஈடுபடுகின்றன.

இது, நமது கழகம் இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சான்று.

தம்பி! நாம், கவனிக்கப்பட்டு வருகிறோம்—நமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் கவனிக்கப்பட்டு வருகின்றன — என்பது தான் பொருள். அதிலே தொக்கி நிற்பது, சுவைதரும் மற்றோர் உண்மை. எவரும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில், இன்று நம் கழகம் இருக்கிறது. அனைவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள் — திகிலுடன் சிலர், திடுக்கிட்டுப் போன நிலையில் சிலர், அருவருப்புடன் சிலர், பொறுமையுடன் வேறு சிலர் — அவரவர், தத்தமது நிலைக்கு ஏற்ற நினைப்புடன் — ஆனால், எவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

அடவியில் சென்றுகொண்டிருக்கிறான் ஒருவன்—கதிரவன் களைத்துப்போய், இளைத்துப்போய், மறையும் நேரம்—கால்கடுக்க நடக்கிறான்—சற்றுத் தொலைவில், மரம் அடர்ந்த இடத்தில், சிறு பொறி காண்கிறான் — உற்றுப் பார்க்கிறான் — பொறி பெரிதாகக் காண்கிறான்—நடையை நிறுத்திக்கொள்கிறான்—தீப்பந்தங்கள் போலத் தெரிகின்றன — அசைவற்று நிற்கிறான் — புலியின் கண்களே, அதுபோலத் தெரிகின்றன, என்று எண்ணுகிறான்—திகிலன்றோ அவன் நெஞ்சில் தீயெனப்புகும்.

மாலை வேளை! ஆற்றோரச் சோலை! அழகு தமிழ்ப் பாடலை இசைத்தபடி, நடக்கிறான், ஒரு இளைஞன்! யார்? என்று, கேட்கிறாய். என்ன தம்பி! நேரம், இடம், கூறினேனே—இதற்கு மேலுமா விளக்கம் வேண்டும்? —சொல்லிவிடட்டுமா அதனையும் — கெண்டை விழியாளைக் கண்டு அவள்தனக்குச் செண்டு தந்து, பின்னர் இன்பமொண்டு உண்டிடச் செல்லும் காதலன், போதுமா! — சரி, அவன் செல்கையில், குக்கூ! குக்கூ! என்ற ஒலி செவியில் வீழ்கிறது. என்ன செய்வான்? முகமலர்ச்சியுடன், தருக்களைக் கூர்ந்து கவனிக்கிறான், எங்கு ஒளிந்துகொண்டு இன்னிசை எழுப்புகிறது, குயில், என்று கண்டறிய. திகிலுணர்ச்சியா, அவனுக்கு—தித்திப்பு உணர்ச்சி!!

அஃதேபோல, அவரவர், தத்தமது நிலைமைக்கு ஏற்ப, எதிர்ப்படுவனவற்றைக் கூர்ந்து கவனிப்பர்.

வழியே கிடக்கும் எருக்கஞ்செடியினையும், எலும்புத்துண்டுகளையும், சோளக்கொல்லை பொம்மைகளையும், வயல் வளைவாழ் எலிகளையும், கத்திக்கத்திச் செத்த தவளைகளையும், காலில் உதையுண்டு சிதறிய ஒட்டாஞ்சல்லிகளையுமா, கூர்ந்து கவனிப்பார்கள். உலகம் என்ன அவ்வளவு விவரமறியாதவர்களின், இருப்பிடமாகவா, உளது! இல்லை, தம்பி! நிச்சயம் இல்லை! எதைக் கூர்ந்து கவனித்தாகவேண்டும் என்பது, மிகநன்றாக உலகுக்குத் தெரிகிறது—அதிலும் அரசியல் உலகு இருக்கிறதே, அதற்கு இந்தத் துறையில் தனியானதோர் திறமை, மிக வேகமாக வளர்ந்துவிட்டிருக்கிறது.

அத்தகைய அரசியல் உலகம், நமது கழகத்தின் ஒவ்வொரு அசைவையும், நமது பேச்சின், 'அசை'யைக்கூட, மிக உன்னிப்

பாகக் கவனித்து வருகிறது; காரணம் தேடுகிறது, பொருளை ஆராய்கிறது, இயன்றால், எவ்வழியில் அதனைப் பயன்படுத்தி, நம்மை வீழ்த்தலாம், என்ற நினைப்புடன்.

நெடுந்தொலைவிலிருந்து வர இருக்கும் எதிரிப் படை கண்ணுக்குத் தெரியு முன்பே, தூசி கிளம்பிடக் கண்டதும், படை வருகிறது, என்பதனைக், கண்டறிய முடிகிறதல்லவா? மண் காற்று அடிக்கிறது—அதனைப்போய் இத்துணைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டுமா, என்று கருதுபவன், அந்தத் துறையிலே ஓர் மதியிலியன்றோ.

அதுபோலத்தான், நமது ஒவ்வொரு நடவடிக்கையும், மாற்றாரின் கண்களிலே, நடவடிக்கை உருவாகு முன்பே, தூசி அளவாக இருக்கும் போதே, தெரிந்துவிடுகிறது.

எனவே, தம்பி! நாமும் நமது நடவடிக்கைகள், திருப்பங்கள், முடிவுகள், முயற்சிகள், முகாம் அமைப்புகள் என்பவைகளை, எதிரிகள் கூர்ந்து கவனித்த வண்ணம் இருக்கிறார்கள், என்பதை அறிந்து, அதற்கேற்ப, நமது செயல் முறைகளை மட்டுமல்ல, பேச்சு முறைகளைக்கூட, செம்மையானவையாக மட்டுமல்ல, ஆற்றல் மிக்கவையாக மட்டுமல்ல, எவரும் பாராட்டத்தக்கவையாக மட்டுமல்ல, எதிரிகள் கண்டு, இதற்கு இதுவா பொருள்? யாமறியாமற் போனோமே! இதற்கா இந்த நடவடிக்கை, எமக்கு முதலில் விளங்காமற் போய்விட்டதே! இவ்விதமாகவா முடிவு செய்தனர், இது திடீர் நடவடிக்கையாகவன்றோ இருக்கிறது!—என்று எண்ணித் திணறத்தக்க விதமாகக், கூடுமானவரையில் அமைத்தல் வேண்டும்—**ஆனால், இது இயற்கையானதாகவும், பலனளிக்கத்தக்கதாகவும், வளர்ச்சியைக் காட்டுவதாகவும், இருத்தலும் வேண்டும்.**

பரபரப்புணர்ச்சிக்காகப் 'பலனளிக்காத் திட்டங்களை மேற்கொள்வதும் தீது பயக்கும்; அமைதியே ஆனந்தம் என்ற போக்குக்காகச்; சொரணையற்றுக் கிடப்பதும், அழிவுதரும், தேய்வினை உண்டாக்கும்.

கரிப்படைகள் மட்டுமே இருந்தால் போதும், வலிவுமிக்க கோட்டைகளையும் தூள் தூளாக்கலாம் என்றெண்ணிப், பிறவகைகளை அமைக்காதிருப்பவன், வெற்றியா பெறுவான்?

கேடயம் ஏந்தாத வாள் வீரன் உண்டோ?

திறமைகள் பலப்பல—அவைகளை இணைத்திடும் முறையோ மிகப் பெரியது, மிக மிகத் தேவையானது.

இன்றல்ல நேற்றல்ல, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை கூறிய இப்பேருண்மையை, நமது நாவலர், விளக்கிக் கூறிடக் கேட்டு இன்புற்று இருப்பாயே,

> இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்

அஃதேபோல, நமது கழகத்துக்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற, ஓய்வறியா வீரர் குழாத்திலே, பல்வேறு துறைகளிலே, பார்மெச்சும் தனித்திறமை பெற்றோர் உளர்—அவர் ஒவ்வொருவரிடமும், அவரவரின் தனித் திறமையினைக் காட்டிக், கழகத்துக்கு வலிவு ஈட்டிடச் செய்திடும் நோக்குடன் ஒவ்வோர் துறை ஒப்படைக்கப்படல் வேண்டும்—அவர்களே தேர்ந்தெடுத்தல் எனினும், சாலச் சிறந்ததே—அவரவர் தத்தமது தனித் திறமையினைக் காட்டிடத், தமக்கேற்ற துறையினிலே ஈடுபட்டு, ஈட்டிடும், கூட்டுச் சக்தியினை, பொது வலிவினை, வடித்தெடுத்து, உம்மிடம் தந்திட, நான்—அந்த நோக்கத்துடனேயே, என்னை 'இருக்கைக்கு' இழுத்து வந்துள்ளனர், என்று உளமார நம்புகிறேன்.

தம்பி! கரிப்படை வலிவளிக்குமா, பரிப்படை வெற்றி தேடித் தருமா, என்பதுபற்றிக், காலாட் படை, பேசியபடி காலத்தை ஓட்டினால், களத்திலே வெற்றியா, கிட்டும்!

அதுபோலவே, நமது கழகத்தவரில், சிலரோ பலரோ, திறமைகளிலே, எந்தத் திறமை பெரிது, உயர்வுடையது, எது முன்னணி; எது மூன்றாமணி, என்று ஆராய்வதிலும், உரையாடிக் கிடப்பதிலும், ஆர்வம் செலுத்திக் கொண்டிருந்தால், திறமைகளைக் காட்டிக், கழகத்துக்கு வலிவு ஈட்டிட, மனமும் வராது; திறமும் குறையும், நேரமும் கிடைக்காது.

திறமைகளின், வகை வளர வளர, இந்தப் பிரச்சினையில், சுவைமிகு சிக்கல் நிச்சயம் ஏற்படும்—அதனை எத்துணை பொறுப்புணர்ச்சியுடன், தன்னல மறுப்புணர்ச்சியுடன், தீர்த்துக்கொள் கிறோமோ, அதைப்பொறுத்தே, நமது வெற்றி உளது.

சென்ற கிழமை, இரு நாட்கள், தொடர்ந்து ஒரு ஆங்கிலப் படம் பார்த்தேன்.

ஆமாம், தம்பி! ஏன் திகைக்கிறாய்? கழகத்திலே பெரிய பிளவாமே! குழப்பமாமே! அப்படிப்பட்ட நேரத்திலே, படக்காட்சிக்குச் செல்வதா, கவலையில்லாத மனிதனா நீ!—என்றுதானே, கேட்கிறாய்—தம்பி! இதிலிருந்தே, நீ தெரிந்துகொள்ளவேண்டும், பெரிய பிளவு — குழப்பம் — என்பன மாற்றாரின் மனதிலே மூண்ட அற்ப ஆசைகளின் ஓசைகள்!!

எனவேதான், நான் படம் பார்க்கச் சென்றேன்—அங்கும் பாடம் தேடிப் பெறும் பக்குவம் எனக்கு நீண்டகாலமாகவே உண்டு, ஆதலால்.

மதத் தொடர்புடைய கதை—சால்மனும், ஷீபாநாட்டு அரசியும் *என்ற படம்.*

சால்மன், *எகிப்து நாட்டிலிருந்து கிளம்பிவந்த மிகப் பெரும்படையால், தாக்குண்டு, தன் படை சின்னபின்னமாகிப் போனதுகண்டு, மனம் வெதும்பிக் கிடக்கிறான்.*

இரவு, இருளை ஏவி அவனையும் அவன் படையினரையும் அரவணைத்துக்கொள்ளச் செய்கிறது, துக்கம் துளைக்கிறது, தூக்கம் இல்லை,

காலையில், சாலமன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறான் — களம் சென்றாகவேண்டும் — காற்றெனக் கடுகிவரும் எதிரிப்படையுடன் போரிட — புயலின் வேகம் எதிரிப் படைக்கு — கிளைகள் முறிந்த மரம் போல், இவன் படை.

எதிர்ப்புறம், ஓர் ஒளிப்பிழம்பு, ஊடுருவிக் கிளம்பிடக் காண்கிறான்.

இருளைக் கிழித்துக்கொண்டு, ஞாயிறு எழுந்தான்—ஞாயிற்றின் ஒளியின் இடையிலேயே, தனிப் பளபளப்புடன், மற்றோர் ஒளி, காண்கிறான். வியந்து, இதற்குக் காரணம் யாது என்று பார்க்கிறான் — அவனிடமிருந்த, கேடயத்தின்மீது கதிரவன் ஒளிபடுவதால், காண்போரின் கண்களைக் கூசிடச்செய்திடும் ஒளிப் பிழம்பு உமிழப்படுகிறது என்பதறிந்தான்.

படையினரை விளித்துக் கேடயங்களைப் பளபளக்கச்செய்து வைத்துக்கொள்ளச் செய்தான்.

பாய்ந்துவந்த எகிப்தியப்படை, குன்றின் முகடு வரும்வரையில் காத்திருந்து, சாலமன் படையினர், தமது கேடயங்களைக் கதிரவன் ஒளி அவைமீது வீழும்வண்ணம், ஏந்தி நின்றனர்—ஒளிப் பிழம்புகள், ஆயிரமாயிரம் கிளம்பின—எதிரிப்படையினரின் கண்களைத் துளைத்தன! வாளுக்கு வாள்! வேலுக்கு வேல்! இது போர் முறை'! ஆனால், இங்கோ,ஒளிப்பிழம்புகள் தாக்குகின்றன. கண் கூசுகிறது! வழி தெரியவில்லை! பாதை தவறுகிறது! ஒளிப்பிழம்பைக் காணமாட்டாமல், வீரர்கள் விழிகளை இறுக மூடிக்கொள்கிறார்கள். குதிரைகள் மிரண்டோடுகின்றன, வழி தவறி. படையிலே குழப்பம்! கிலி! விவரமறியாததால் திகில்! படை, மலை முகடுசென்று, படுகுழியில் வீழ்கிறது — சின்னாபின்னமாகிறது. தாக்காமலேயே, தாக்கவந்த பெரும் படையை வீழ்த்துகிறான் சாலமன், அறிவாயுதம்கொண்டு. பள்பளப்பான கேடயம், கூர்மையான வாளேந்திய குதிரை வீரர்களை வீழ்த்திவிடுகிறது. ஒளிப்பிழம்பு கிளம்பிப், பெரும் படையைப் பிளந்தெறிகிறது.

தம்பி! கேடயத்தின் பளபளப்பை, ஒளிப்பிழம்பாக்கி, எதிரிப் படையை முறியடிப்பது, சாலமன், செய்துகாட்டும் வரையிலே போர் முறைகளிலே, ஒன்று அல்ல! நிலைமை, ஒருபுது முறையை அளித்தது, வெற்றியும் கிடைத்தது.

நாமும், மிகப்பெரிய படையினைத் திரட்டிவைத்துக்கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியைக் களத்திலே சந்திக்கவேண்டும்—ஆற்றல்மிக்கது நமதுபடை எனினும், அவர்கள் திரட்டிக்காட்டத்தக்க அளவு, மிகப் பெரிதாகவே அமையும், அறிந்திருக்கிறோம்.

இத்தகைய போரில் நாம், முறைகள், அணிகளின் வரிசைகள், திறமைகளின் வகைகள், அவைகளிலே உள்ள ஏற்றத்தாழ்வுகள் இவை குறித்துப் பேசிக்கிடப்பது, நேரக்கேடு, திறமை துருப்பிடிப்பது என்பவைகளை, நாமே வலியத்தேடிப் பெற்றுக்கொள்ளும் தற்கொலைத் திட்டமாக முடியும்.

மாற்றார், நமது முறை, முகாம், வரிசை, திறமைகளின் வகை, என்பனபற்றி, அறிந்திடவும், அறிவதால் கலாம் விளைவித்திடவும், வழி ஏற்படச்செய்து வைப்பது, நமது படைவரிசையை நாமே, நம்மையும் அறியாமல், காட்டிக்கொடுத்துவிட்டுப், பிறகு கண் கசக்கி நிற்கும் கருத்தற்றோர் ஆக்கிவிடும்.

முறைகளிலே, நிலைமைகளுக்கேற்பத் திருப்பங்கள், திருத்தங்கள், புதுமைகள் கண்டிடத் தெரிந்தாலன்றிக், கேடயம் கக்கிய ஒளியினைக்கொண்டே, எதிரிப் படையினை அழித்தொழித்துச் சாலமன் பெற்ற வெற்றிபோல, நமக்கு வெற்றி கிட்டுவதும், இயலாததாகிவிடும்.

இப்போது, சொல்லு தம்பி! நாம் மேற்கொண்டுள்ள குறிக்கோள் வெற்றிபெற வேண்டுமானால், நாம் எத்துணை விழிப்பாக இருத்தல் வேண்டும் என்பது புரிகிறதல்லவா?

*

இனி, ஒருவிடுதலை இயக்கம், தன் குறிக்கோளில் வெற்றிபெற, என்னென்ன வகையான, திறமைகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பதுபற்றியும், எண்ணிப் பார், அந்தத் திறமைகளைத் தமது தனித்திறமையாகப் பெற்றுத் திகழும், தம்பிமார்களின் முகாமல்லவா, நமது கழகம் என்பதையும் நினைத்துப்பார்— அப்போதுதான் நமது கழகத்தின் அளவு மட்டுமல்ல, இயல்பு, விளங்கிடும்—ஏற்றம் தெரிந்திடும்.

மாற்றார் மேடை தவறாமல், சிக்கலான கேள்வியை எழுப்பி, நமக்குத் தொல்லை தருகிறார்களே, என்ன கூறி, இந்தச் சிக்கலை அறுப்பது என்று எண்ணிடும்போது, தம்பி! சிற்றரசு உன் நினைவிற்கு வருகிறாரல்லவா! ஆமாம்! அவர் பேசினால், இந்தச் சிக்கலையே சின்னாபின்னமாக்கி எறிவார் என்று தோன்றுகிறதல்லவா?

கேட்பவர்கள் கிடுகிடுக்க, எதிரிகள் படைநடுங்க, நமது படை எக்களிக்க, சம்மட்டி அடி கொடுப்பது போல, மொழியும் விழியும் உறுதியையும் உணர்ச்சியையும் கொட்டிடத் தக்கபடி பேசினால், மாற்றார் மமதை மடியும், என்ற எண்ணம் தோன்றும்போது சம்பத் தெரியவில்லையா உன் கண்முன்பு!

நெஞ்சம் நெக்குருக, இதயம் விம்மிட, கண்களில் நீர் துளிர்த்திட, நரம்புகள் புடைத்திட, ஓசை நயமும் சொல்லடுக்கு அழகும் துலங்கிடப் பேசி, நமது கொள்கை வழி, கேட்போரை ஈர்த்திடவேண்டும் என்று எண்ணும்போது, கருணாநிதியைக் காண்கிறதன்றோ உன் மனக்கண்.

ஆரியப்படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும்படை நடாத்தியவனின் பெருமை,

சாவகம் யவனம், சிங்களமெனும் பல நாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சா நெஞ்சம், பரணிபாடித் தரணியாண்ட பைந்தமிழ் வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டமாட்சி, இவைதமை, முகபடாம் போர்த்த யானைமீதமர்ந்து, முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், இன்று இயற்றும் இன் கவிதை என்றும் நிலைத்து நின்று அறிவு புகட்டும் என்று அறிந்து கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ்ப் புலவோன் போலவும், தமிழழகும், இலக்கியச் செறிவும் தெளிவும் மிளிர, இனிமை துள்ளிட, ஏறு நடையில், பேசினால், தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர், கழகத்தின் மாண்பறிவர், என்று எண்ணிடும் வேளையிலே, நாவலர் நெடுஞ்செழியன், நினைவிலே வந்து நின்று, அன்புகெழுமிய தோழர்களே! தோழியர்களே! என்றழைக்கும், பாங்கு தெரியாமலிருக்குமா?

பிரச்சினைகளை அலசி, எளிதாக்கித் தொடர்புடையன, தொக்கி நிற்பன, துணை வருவன, என்னும் வகையினதான கருத்துக்களையும் பிணைத்து, ஆசிரியர் போல எடுத்துக் கூறிக், கேட்போர்க்குத் தெளிவளித்து, நம் பக்கம் அவர் தம் ஆதரவைத் திரட்டிட வேண்டும், என்று எண்ணம் தோன்றும் போது, பல ஆண்டுகள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியப் பணிபுரிந்து, இன்று விடுதலை இயக்கத்தின் வீரர் கோட்டத்திலே, திகழும், அன்பழகன் அழைக்கப்பட வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

கட்டையாய் குட்டையாய் உள்ள இந்த இளைஞன் கல்லூரியில் படித்த நாள் தொட்டு, காண்போரைக் கண்களால் கவ்வி, எண்ணங்களை எடுத்து இயம்பும் போது, கேட்போர், ஏற்றுக் கொண்டனர் என்று அறிந்தாக வேண்டும் என்ற இயல்புடன், நிறுத்தி நிறுத்திப் பேசி, உலைக்கள நெருப்பு வளரட்டும் என்று காத்திருந்து, தழல் கொழுந்துவிட்டதும், இரும்பினைப் பழுக்கக் காய்ச்சி எடுத்துச் சம்மட்டி அடி கொடுக்கும் பான்மை போல, எண்ணி எண்ணித் துவக்கி, பின்னர், மேலை நாட்டு வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னி, கொள்கைக் கனலைச் சொற்களாக்கித் தருகிறான்—இத்தகு திறமுடையான் இளைஞர்தமை நமது இயக்கம் ஈர்த்திடத் தக்க வழிமுறை கொண்டான், என்றன்றோ மதியழகனைக் குறித்து, எண்ணுவீர்!

நாடு நமது ஆகாதிருப்பதால் வந்துற்ற நலிவு, நாடாள்வோர் எதனையும் நன்முறையில் கவனியாது இருப்பதால் ஏற்படும் இன்னல், வடவரிடம் சிக்கியதால் வந்துற்ற சீர்கேடு, இவை குறித்துக், கேட்போர் மனதில் குமுறல் எழவேண்டும், எனில், உருக்கமும் உழைப்பாளியின் உள்ளம் அறிந்த தன்மையும், வேதனையைக் காட்டிடும் குரல் கம்மலும், எளியார்க்கே இக்கழகம் என்பதனை எடுத்துக் காட்டிடும் தோற்றமும், கொண்ட முறையில் பேசிப், பாட்டாளிகள், நமக்கேற்ற பாசறை, தி. மு. க. என்று உணரச் செய்தல் வேண்டும், என்ற எண்ணம் எழும்போது, நடராசன் என்று நினைவு செல்கிறதன்றோ.

தம்பி! இஃதேபோல ஒவ்வொருவர் குறித்தும், என் எண்ணத்தைக் கூறப்புகின் ஏடு கொள்ளாது—நாடு மதித்திடத்தக்க நல்ல திறமையினைப் பெற்றிருப்போர், நமது பெரும்படையில், உள்ளனர். நான் என் பணியினை எளிதாக்கிட, உடன் இருந்து உழைத்து வெற்றி தேடிட முனைந்து, இப்போது செயலாற்றும் செம்மல்களை மட்டும், குறிப்பிட்டேன்-மற்றவர்பற்றிக் கூறிட ஏதும் இல்லை என்பதால் அல்ல — ஏட்டில் இடம் இராது என்பதால்.

ஒரு விடுதலை இயக்கம் இதனினும், சிறந்ததோர் பாசறையை இவ்வளவு குறுகிய காலத்திலே, பெற்றது இல்லை.

இதனை எண்ணி மகிழவும், இந்த நிலைமையைத் தக்கபடி பயன்படுத்திப் பலன் பெறவும், நாம் ஒவ்வொருவரும் முனைந்து நிற்கவேண்டுமேயன்றி, மாற்றார், நமது முறைபற்றிக் கூறிடும் மருளுரை கேட்டு, மனம் தடுமாறிடப்போமோ!!

பார்! பார்! பயல்கள் நாலே நாட்களில், பிளவுபட்டு, ஒருவரை ஒருவர் ஏசிக்கொண்டும், எதிர்த்துக் கொண்டும், திக்காலொருவராக ஓடப்போகிறார்கள்—என்று கூறினாராம், 'காமராசர்—'தீர்க்கதரிசனம்'—தெரிந்தவர்—முதலமைச்சர் அல்லவா!!

ஆனால், நடந்தது என்ன?

ஆராய்கிறார்களாம், அரசியல் வட்டாரத்தில்—இதன் பொருள் என்ன? நோக்கம் என்ன? விளைவு யாதாக இருக்கும் என்று.

•

தம்பி! பொதுக்குழு எடுத்த முடிவு, மாற்றார்களின் முகாம்களிலே, உலவிக்கிடக்கும், ஒற்றர்கள், உளவாளிகள், அங்கிருந்து கிளம்பிப், பிற இடங்களில் உறவாடிக் கெடுத்திட நினைக்கும் நயவஞ்சகர்கள் ஆகியோர்களுக்கு, அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டதாம்.

ஆயிரத்தெட்டு ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டு அவர்கள் கிடக்கட்டும் — தம்பி! — உனக்கு வேலை, நிரம்ப இருக்கிறது—தொடர்ந்து செய்யப்படவேண்டிய பணி.

ஒருவர், முன்பு—இப்போது, அதே பணியினைச் செம்மையாகவும், வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணமும் நடத்திச்செல்லப் பலர்!

மாற்றம் இவ்வளவே—திருப்பம், இதுதான்.

உள்ள திறமைகள் அவ்வளவையும், திரட்டிப் பயன்படுத்த வேண்டிய நேரமிது.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் துறை நின்று, முன்நின்று, வழி கண்டு, வல்லமையை ஈந்து, பணிபுரிந்து, பொது நோக்கம் ஈடேறப் பாடுபடவேண்டிய வேளை இது.

எந்த ஒரு கட்சியிலும், முதல் கட்டத்தில், 'யார் உங்கள் கட்சிக்குத் தலைவன்? என்று பிறர் கேட்கக் கூட மாட்டார்கள்?

இன்றும் அதுபோலக் காட்சிகள் பல உள.

இரண்டாவது கட்டத்திலே, அலட்சியத்துடனும் கேலிச் சிரிப்புடனும், இவன்தானே உங்கள் கட்சிக்குத் தலைவன்? என்று கேட்பர்.

மூன்றாவது கட்டம் வந்ததும், யார் உங்கள் கட்சிக்குத் தலைவர், அவரா? இவரா? எவர்? என்று கலாம் விளைவிக்கும் நோக்கத்துடன் கேட்பர்.

நாலாவது கட்டத்தின்போது, கட்சித் தலைமைக்காக அவனும் இவனும் மோதிக்கொள்ளப்போகிறார்கள், அமளி எழப்போகிறது, கட்சி அழியப்போகிறது, என்று ஆரூடம் கணிப்பார்கள்.

ஐந்தாவது கட்டத்தில், ஏமகாதகப் பேர்வழிகளப்பா இவர்கள். என்னமோ பேதம் என்றார்கள், பிளவு என்றார்கள், குழப்பம் வரும் என்றார்கள், குட்டிக் கலகம் ஏற்படும் என்றார்கள்-கடைசியில் பார்த்தால், எல்லோருமே ஒன்றாகத்திரண்டு நின்று, இதுதான் எமது கட்சி, தெரிகிறதா புரிகிறதா, என்று கேட்கிறார்களே, ஏ! அப்பா! சாமான்யப்பட்டவர்களல்ல, இவர்கள் — என்று பேசிக்கொள்வார்கள்.

அதுதான் தம்பி! இது!! நாம், வளர்ச்சிபெற்றிருக்கிறோம், மாற்றார் எதை எதையோ எண்ணி எதிர்பார்த்து, ஏமாந்து, ஏக்கமுற்றுப்போகும் நிலையிலும், அளவிலும், நாம், வளர்ந்திருக்கிறோம்.

ஏமாளிகள், எண்ணிக்கொண்டார்கள், நமது கழகம் பிளவுபடும் என்று — நாம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோவோம், என்று. நான் நமது கழகத்தைக் குறித்து கொண்டுள்ள நம்பிக்கை, நமது உடன்பிறந்தார்கள் பற்றி எனக்குள்ள மதிப்பும் பற்றுப் பாசமும், எத்தகையது என்பதை அவர்கள் எங்ஙனம் அறியமுடியும்?

இருவர் மட்டும் செல்கின்றனரே, ஐந்துநூறு பேர் உள்ள அயலார் கோட்டை சென்று, உரிமை முழக்கமிட. என்ன நேரிடுமோ? எவன் தாக்குவானோ? என்றெண்ணிச், சம்பத்தை, டில்லிக்கு வழியனுப்பி வைத்தபோது, என் கண் கலங்கியதை, மாற்றுக்கட்சி முகாமில் இருந்துகொண்டிருக்கும், 'இடம்பிடித்தான் களால்' எப்படி, உணர்ந்துகொள்ள முடியும்?

கண்ணதாசனைச் சுட்டுக்கொன்றுவிட்டார்களாமே! — என்றோர் வதந்தி, மும்முனைப் போராட்டத்தின் போது, சிறை நுழைந்து என் காதினில் நுழைந்ததால், சோற்றுத் தட்டிலே, சிந்திய, என் கண்ணீர் பற்றி, மாற்றுக் கட்சியினர் எங்ஙனம் தெரிந்து கொள்ள முடியும்? அந்தக் கண்ணீரின் மதிப்பும் சக்தியும் இன்னது என்றுதான் அவர்களால் எப்படிக் கணித்திட இயலும்.

நாடகமாடுவதை இயக்கத்தொண்டாகவும், தொழிலாகவும்கூடக்கொண்டு கருணாநிதி இருந்த நாட்களில், எதிரிகள் இழுத்துப்போட்டு அடித்து, பிணமானான் என்று கருதிப் பெருஞ்சிரிப்புச் சிரித்து விட்டுச் சென்றனர் என்பதைக் கேள்விப்பட்டவுடன், தம்பிக்கு வந்துற்ற ஆபத்தினைத் தடுத்திடும் ஆற்றலும் அற்ற நிலையிலே இருக்கிறேனே! என்போன்றார் மொழிகேட்டும், காட்டும் வழி நடந்தும் பணியாற்றிய, வாழ்க்கையைச் சுவைத்திடாப் பருவத்தினனை, மாபாவிகள், நொறுக்கினரே, அடிபட்டபோது இரத்தம் கொட்டியபோது, கயவர் கத்தியைக்காட்டிய போது, என்னென்ன எண்ணினானோ! எனக்கு ஒரு அண்ணன் உண்டு! அவன் சொல்லில் எனக்குப் பற்று உண்டு! அவன் இருக்க நாம் அச்சமடையத் தேவை இல்லை என்றெண்ணி இருந்தேன், இதோ நான் கொல்லப்படுகிறேன், எங்கு இருக்கிறான் என் அண்ணன்? என்றெல்லாம் எண்ணித் திகைத்தானோ —இதுபோலெல்லாம் எண்ணிப், புதுவையிலிருந்து விழுப்புரம் வந்து சேரும்வரையில், விம்மிக்கிடந்தேன் —இடம் தேடி அரசியலை நாடியோருக்கு அந்த இதயத் துடிப்பு எப்படித் தெரியமுடியும்?

அடையாற்றில், காந்திநகரில், நடிப்பிசைப் புலவரின் வீட்டுமாடியில் படுத்துப் புழுவெனத் துடித்துக்கிடந்தேன், நண்பர் நடராசனை, குன்றத்தூரில் 144 தடையைமீறச் சென்றதற்காக, போலீஸ் தாக்குதல் நடத்தி, துப்பாக்கிச்சூடு எழுப்பினார்கள், நடராசன் என்ன ஆனாரோ தெரியவில்லை என்று, செய்தி தெரிவிக்கப்பட்டபோது.

பாராங்கல்லைத் தூக்கி மண்டையில்போட்டு, நாவலரைக் கொன்றுவிடத் தேனியில் முயற்சிசெய்யப்பட்ட செய்திகேட்டு, பழந்தமிழரின் வீரத்துக்கு உறைவிடம் என்று கூறத்தக்க, கட்டுடல் கொண்டவர் தானெனினும், குழந்தை உள்ளமாயிற்றே நெடுஞ்செழியனுக்கு, கொடியவர்கள், கொலைக்கஞ்சாப் பாதகர்கள் சூழ்ந்தகாலை, எப்படி எப்படிப் பதறினாரோ, எதை எதை எண்ணித் துடித்தாரோ என்றெண்ணித் துடிதுடித்துப்போன என் முகத்திலே கப்பிக்கொண்டிருந்த வேதனையை, வேற்றுக் கட்சிக்காரர்கள், எப்படிப் பார்த்திருக்க முடியும்?

தம்பி! நம்மில், ஒருவர் மாற்றாரால் வதைக்கப்பட்டதைக் கேட்டு மற்றவர் மனம் குமுறிக்குமுறி, ஒருகுடும்பத்தினரானவர்கள் —ஒரு கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமல்ல.

இதோ இப்போது, பொதுக்குழு கூடும் சமயத்தில், கையிலும் காலிலும் வெட்டுக் காயத்துடன், தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்த குன்றத்தூர் சம்பந்தத்தையல்லவா, கண்டேன்—கட்சிக்காரர் என்று எண்ணத் தோன்றும்—நமது குடும்பத்தவரிலே ஒருவன்—நாம் கொண்ட கொள்கைக்காகக் கொடியவர்களின் தாக்குதலைத் தாங்கித் தத்தளிக்கும் உடன்பிறந்தான் என்ற எண்ணமல்லவா எழுகிறது.

இத்தகைய ஒரு குடும்பத்திலே, முறைகளைப் புதுப்பிக்க எழும் வேகம் அல்லது ஆர்வம், பணியாற்றுவதிலே எவரெவர் எந்தெந்தத் துறை நிற்பது என்பது குறித்து எழும் எண்ணங்கள் ஒன்றோடொன்று உராய்ந்துகொள்வது போன்ற இவைகளைக் கேட்டும், காட்டியும், பிளவு ஏற்படும் என்று எதிர்பார்ப்பது பேதைமை—பிளவு மூட்டிவிடவேண்டு

ன்று முயற்சிப்பது கொடுமை—பிளவு ஏற்படவில்லையே, என்று திகைத்தும் திகிலுற்றும் பேசிக்கிடப்பது, மடைமை.

தம்பி! மாற்றார், இது குறித்து எப்படிவேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளட்டும், கதைத்துக்கொள்ளட்டும்—உனக்கும் எனக்கும் அது குறித்துக் கவலைஎழக் காரணம் இல்லை.

•

பொதுத்தேர்தலை எதிர்நோக்கி நாம் இருக்கும் நேரமாகப்பார்த்து, என்னை இழுத்து உட்காரவைத்துவிட்டார்கள்—பொதுச்செயலாளராக.

அமைச்சர்கள், புகாத ஊரில்லை, போகாத நாளில்லை, பேசாத புளுகு இல்லை, ஏசாத வேளையில்லை என்று ஆகிவிட்டிருக்கிறது.

மற்றோர் புறமோ, தாக்குவது, குத்துவது, வெட்டுவது, கோணல் வழக்குகள் தொடுப்பது, என்ற முறையில் அமளி மூட்டிவிடும் நடவடிக்கைகள், அவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன.

பணம் படைத்தோரைப், பயமூட்டியும் ஆசைகாட்டியும், தேர்தல் நிதி மிகப்பெரிய அளவிலே திரட்டி வருகிறது, காங்கிரஸ் கட்சி.

முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, ஐந்துகோடி ரூபாய் செலவிட்டது காங்கிரஸ் கட்சி என்று, வெட்கமின்றி வீராப்புடன், காங்கிரஸ் அமைச்சர் ஒருவரே பேசினார், பதினைந்து நாட்களுக்கு முன்பு.

நமது கழகப் பிரசாரத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் முறை பல வழிகளில் கையாளப்பட்டு வருகின்றன.

அதிகார வர்க்கமே ஓட்டுப் பெற்றுத்தர, ஏவிவிடப்படக்கூடும் என்று ஐயப்படத்தக்க சூழ்நிலை இப்போதே தெரிகிறது.

இந்த ஐயம் நீங்கவும், பொதுவாழ்வுத் துறையிலே ஒழுக்கம் ஓங்கவும், தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்பு, காங்கிரஸ் அமைச்சர்கள், தமது பதவியைவிட்டு விலகுவது, அறமாகும் என்று அன்பர் ஆச்சாரியார் பேசுகிறார்—அது எள்ளி நகையாடப்படுகிறது.

புயல் பலமாகத்தான் இருக்கும்—சந்தேகமில்லை.

நாம், அதனை எதிர்த்து நின்று வெற்றி பெற்றாக வேண்டும்—ஏனெனில், நாம், தனி ஆட்களுக்காக அல்ல, அரசியல் கட்சி என்பதற்காக அல்ல—விடுதலை இயக்கம் இது—இதற்கு மக்களிடம் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்பதை உலகறியச் செய்தாக வேண்டும்—அதற்காக நாம், தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும்.

தம்பி! உன் நினைவிலே இந்த நிலைமைதான், பளிச்சிட்டுக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி, இவரிவர் இன்னின்ன இடத்தில் இருப்பது எதற்கு என்ற பிரச்சினை அல்ல; அந்தப் பிரச்சினை சூடுதரும், சுவை தாராது—சூடே சுவைதான் என்று வாதிடுவேரேல், அந்தச் சுவையின் மூலம், கழகம் பலன் பெறாது என்றுதான் கூறவேண்டும்.

எனவே, தம்பி! நமது கழகத்தின் கட்டுக்கோப்பினைக் குறித்தும், ஒன்றுபட்டுப் பணியாற்றும் மாண்பு குறித்தும், நாட்டவருக்கு எடுத்துக் கூறு,

நாட்டவரின் நலிவு போக, வாழ்வு துலங்க, நாம் எடுத்துக் காட்டும் வழியன்றிப் பிறிதோர் வழி இல்லை என்பதை எடுத்துக் கூறு.

அனைவரையும் ஆற்றல் படைத்தோராக்கு. வீரர்களாக்கு; விடுதலைப் போரார்வம் கொண்டவர்களாக்கு!

அண்ணனைச் சிக்கவைத்துவிட்டோம், என்பதிலே மட்டும் அகமகிழ்ச்சி கொள்வதிலே அர்த்தமில்லை.

எனக்கு இதுமுதன் முறையுமல்ல, பூரிக்க, வாழ்த்துகளைப்பெற்று இன்புற.

நான் தம்பி! திராவிடர் கழகமாக நாம் இருந்தபோதே, பொதுச்செயலாளன் தான்.

என் நிலைமையிலோ,பெறும் இடத்திலோ ஏற்றம் இல்லை, மாற்றம் இல்லை. என் இயல்பிலேயும் மாற்றம் ஏழாது.

எளிதிலே திருப்திபெற்றுவிடுபவன், என்னைக் காட்டிலும் ஒருவர் உனக்குக் கிடைப்பது அரிது.

ஆனால், காரியம் சரியாகச் செய்யப்படவில்லையோ என்ற எண்ணம் ஏற்படும்போது, மற்ற எவரையும் விட அதிகமாக ஏக்கம் அடைபவன், நான்.

"அச்சம் வேண்டாம் அண்ணா' நானிருக்கிறேன், துணை நிற்கிறேன்! என்று உன போன்றோர், பல இலட்சம், கூறிடும் காட்சி மனக்கண்ணால் காண்கிறேன். காண்பதனால்தான், 'சுமைதாங்கி' வேலைக்கு இசைவு தந்தேன்.

என் வேலையை எளிதாக்குவதும், சுவைமிக்கதாக்குவதும், பயனுள்ளதாக்குவதும், வெற்றியுள்ளதாக்குவதும், உன்னிடம்தான், தம்பி இருக்கிறது.

சிதறிச் சிதறிக்கிடந்த சக்திகளை, பத்தே ஆண்டுகளிலே, ஓரிடம்கொணர்ந்து, ஒன்றுபடுத்தி; ஓர் எழிலுருவம் தந்த, செயல்வீரனல்லவா! என்னை மகிழ்வித்து, வெற்றிப் பாதையில் கழகத்தை அழைத்துச் செல்லவா உன்னால் முடியாது!!

வா, தம்பி! வா! அந்த எழுச்சியூட்டும் நம்பிக்கையுடன் நாம் ஒன்றாகக்கூடி இன்பத்திராவிடம் தேடி, நடைபோடுவோம்.

பிறந்த பொன்னாட்டுக்கு விடுதலை பெற்றுத்தர, நாம் நம்மை ஒப்படைத்துவிட்டோம். வெற்றி நமதே!

அண்ணன்,

அண்ணாதுரை

அடுத்த இதழில்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிச் சி. என். ஏ. சென்னை சட்டசபையில் ஆற்றிய சொற்பொழிவு முழுவதும் வெளியிடப்படும்.

தடை நீங்குமா?

இலங்கை இதழ் 'ஈழ நாடு', ஜனத்தொகை பெருகுவது பற்றிக் கவலை தெரிவிக்கிறது.

குறிப்பாக 'ஆசியா'க் கண்டத்திலே ஜனத்தொகை பெருகி வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

'கருத்தடை'தான், இந்தப் பிரச்சினைக்கு, மாமருந்து என்று பலர் கூறுகின்றனர்; ஈழநாடு இதனை ஏற்க வில்லை. வேறோர் 'வழி' இருக்கிறது எனச் செப்புகிறது.

படிப்போர், இதுகுறித்துச் சிந்திப்பதற்காக, 'ஈழநாடு' தந்த கருத்து இங்கு தரப்பட்டிருக்கிறது.

*

"இப்போது உலகத்திலே மொத்த ஜனத்தொகை 290-கோடி. சென்ற ஆண்டில் மட்டும் மக்கள் எண்ணிக்கை ஐந்துகோடி அதிகரித் திருக்கிறது. இப்படியே பெருகிக்கொண்டுபோனால் உணவு போதா தென்றும், உலகம் தாங்காதென்று சிலர் அஞ்சலாம். ஆனால் இயற்கை யின் நியதியைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. விஞ்ஞானம் வெகுவாக முன்னேறிவருவதால், அதிகரிக்கும் மக்களின் நல்வாழ்வுக் கான முறையில் அதைப் பயன்படுத்த முற்படுவதே உலக நாடுகளின் மேலான கடமையாகும்.

மொத்த ஜனத்தொகையில் சுமார் பாதிப்பேர் அதாவது 145 கோடி மக்கள் ஆசியாக்கண்டத்தில் உள்ளதாயும், மற்ற நான்கு கண் டங்களிலும் மற்றப் பாதிப்பேர் வாழ்வதாயும் ஐ. நா. புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இன்னும் 10-ஆண்டுகளுக்குள் ஆசியா ஜனத்தொகை விகிதாசாரம் 60-சதத்துக்கும் அதிகமாகும்.

ஆசியாவில் மட்டும் மக்கள் இப்படிப் பெருமளவு நெருக்கமாகி மேலும் பெருகிக்கொண்டு போவது, அம்மக்களின் நல்வாழ்வுக்குத் தீ காகும். இப்பிரச்சினை தீர வழி என்ன? ஆசியாவில் கருத்தடை இய க்கத்தைப் பரப்ப வேண்டுமென்று சிலர் கூறலாம். அதை நாம் ஒப்பவில்லை

இன்று ஆசியாவிலுள்ள மக்கள், வேறு எந்தக் கண்டத்துக்கு சென்று குடியேறி வசிக்க முடியாதபடி பலவித தடைச் சட்டங்கள் உள்ளன. ஐரோப்பியருக்கு அந்தத் தடையில்லை. ஆஸ்திரேலியா ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் மக்கள் விதாசார மிகவும் குறைவு. ஏராளமான நிலங்கள் தரிசாக உள்ளன. ஆசிய மக்களும் இஷ்டப்படி இடமுள்ள எந்த நாட்டிலும் சென்று குடியே வசிக்கத் தக்கமுறையாய், தடைகள் நீக்கப்பட்டால், ஆசியாவின் ஜ நெருக்கம் குறையவும், மற்ற நாடுகள் சுபிட்சமாக முன்னேறவும் கூடு

ஆசியா மக்கள் ஆசியாவுக்குள்ளாகக் கூட அண்டைநாடுகளு க்கும் செல்லமுடியாதபடி, தடைகள் இருந்துவருகின்றன. ஆசிய ஆபிரிக்கா நாடுகள் சேர்ந்து தங்களுக்குள் இத்தடையைத் தளர்த்த துடன், உலகில் எங்கும் சென்று நாணயமாக உழைத்து வாழும் அடி படை உரிமை எல்லா மக்களுக்கும், சிறப்பாக ஆசிய மக்களுக்கு கிடைக்க முற்படவேண்டும். ஐக்கிய நாடுகள் சபை மூலம் இ ஏற்பாட்டைச்செய்வதை இனியும் அதிககாலம் தள்ளிவைக்கமுடியாத





மாஸ்கோவில் தமிழகம்

[கா. பொ. இரத்தினம்]

இவ்வுலகில் ஏறக்குறைய ஈராயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறு மொழிகள் உள. இவற்றுள் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட மக்களாற் பேசப்படும் மொழிகள் இருநூறு; நாலுகோடிக்கு மேற்பட்ட மக்களாற் பேசப்படுவன இருபது. இந்த இருபது மொழிகளிலே தமிழும் ஒன்றாகும். எனினும் இது சமஸ்கிருதம், கிரீக்கு, இலத்தீன் எனபனவற்றைப் போன்றதொரு உயர்தனிச் செம்மொழியாகவே விளங்குகிறது. தமிழோடு பழைமை பாராட்டும் மொழிகள் மாற்றமடைந்தும் இறந்தும் போய்விடத், தமிழ்மொழி மட்டும் இன்றும் இளமையோடு இலங்குகின்றது. மொழிவரலாற்றிலே ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததுபோல் இன்றும் குன்றாத இளமையுடன் வாழும் உயர்தனிச் செம்மொழிக்கு உதாரணமாகத் தமிழ் மொழியினை மட்டுமே குறிப்பிடலாம்.

இப்பொழுது தமிழ் மொழி தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமன்றி, மலாயா, சிங்கப்பூர், பர்மா, பீசித்தீவுகள், மொறிசியசு, தென் ஆபிரிக்கா முதலிய இடங்களிலும் வழங்கி வருகிறது.

"தமிழகம்" எனுஞ் சொல்லே தமிழ் வழங்கும் நாடுகளைக் குறித்தற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளது. இச்சொல்லைத் தொலமி என்பர். 'தமரிக்கா' எனக் குறிப்பிட்டுளர்.

தமிழகத்திலே தமிழினைப் பேசி வாழ்ந்த மக்கள் தமிழர் எனப்பட்டனர் தமிழர்கள் இந்தியாவின் பழங்குடியினரோ, பின்னர் வந்த ஆரியர்களையும் பிற சாதியினரையும்போல வேறிடத்திலிருந்து இந்தியாவுக்குள் புகுந்தகுடியினரோ என்பது முன்னர் விவாதத்துக்குரியதாயிருந்தது. ஐரோப்பிய அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் இதுபற்றிப் பல் கருத்துக்களை வெளிப்படுத்தியுளர்.

கால்டுவெல், கனகசபைப்பிள்ளை மாசுமன், பேக்யூசன், ஹென்னடி, திருப்பதி, முதலானோர் தமிழர் தோன்றியவிடம் இந்தியாவுக்கு வெளியே எனக் குறிப்பிட்டுளர். எனினும், அவர்களுடைய கொள்கைகள் பொருத்தமற்றன வெனவும், தமிழர்கள் தென்னிந்தியாவுடன் தொடர்ந்து பரந்திருந்த இலெமூரியாக் கண்டத்தையே தம் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எனவும் பூரணலிங்கம்பிள்ளை முதலானோர் கூறியுள்ளனர். மொகஞ்சதாரோ, ஆரப்பா முதலிய இடங்களில் எடுக்கப்பட்ட புதைபொருள்களும் பழந்தமிழ் இலக்கியங்களும் இவர்களுடைய கொள்கையை அரண் செய்கின்றன.

இலெமூரியாக் கண்டம் இக்காலத் தமிழ்நாடுகளையுள்ளடக்கி இந்து சமுத்திரத்திற் பெரும் பகுதியிற் பரவியிருந்தது. தமிழ் இலக்கியங்கள் இக்கண்டத்தையே சம்புத்தீவு அல்லது நாவலந்தீவு எனக் குறிப்பிடுகின்றன என்பர். அடுத்தடுத்து உண்டான பெருங்கடற்கோள்களினால் இப்பரந்த கண்டம் மறைந்துபோக விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள தக்காணம் மட்டுமே எஞ்சிற்று. புவிவரலாற்றியல், மனிதரியல், உலக வரலாறு, முதலிய துறைகளிலே தேர்ந்த பேறிஞர்கள், இக்கடல் கோள்கள் நிகழ்ந்தனவென்பதை ஏற்றுள்ளனர். பேராசிரியர் சீக்கில் மனித இனத்தின் தொட்டிலைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தும் தக்காணம் மிகப் பழையதொரு நிலப்பகுதியெனபதை வலியுறுத்துகிறது. இறைசிலி என்பார் தக்காணம் உலகின் மிகப் பழைய பூப்பகுதிகளில் ஒன்று என்றுரைத்தனர். இவற்றால். தக்காணம் பல்லாயிர ஆண்டுளாக நிலைத்துள்ள பூப்பகுதி என்பது தெளிவாகின்றது. எனவே, இறைசிலி என்பார் கூறுவது போலத் தக்காணத்திலே தமிழர் சரித்திர காலத் தொடக்கம் மட்டுமன்றி, அளவிட்டுக் கூற முடியாத காலம் வாழ்ந்து வருகிறார்கள் எனலாம். தமிழ்ச் சொற்களையும், தமிழ் மக்களின பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்து தமிழர் தென்னிந்தியாவின் பழங்குடிகளே என, பி. ரி. சீனிவாச ஐயங்கார் முடிவு செய்துள்ளார்.

இவ்விடத்திலே திருக்குறட் செய்யுள் ஒன்றிலே வரும் 'பழங்குடி' எனுஞ் சொல்லுக்குப் பரிமேலழகர் கூறும் விளக்கவுரை குறிப்பிடத்தக்கது. "தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்கிறார் பரிமேலழகர். புறப்பொருள் வெண்பா மாலையிலே ஒரு குடியின் பழைமை "கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே முற்றோன்றி முற்பட்ட குடி" எனக் கூறப்பட்டுள்ளது. இவையெல்லாம் தமிழர் கடல்கோள்களினால் மறைந்துபோன இலெமூரியக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும், இக்கண்டத்தில் இப்பொழுது தக்காணமே எஞ்சியுளது என்பதையும் நன்கு புலப்படுத்துகின்றன.

"திராவிடர்களின் பிறப்பிடம் இந்தியாவின் தென் பகுதி எனக் கொள்ளலே மிகப் பொருத்தமானது. இந்தியாவுக்கு வெளியேயுள்ள எப்பகுதியுடனும் அவர்களை இணைக்கும் ஐதிகக் கதை ஒன்றுமில்லை. அவர்கள் உறவு கொண்டாடத் தக்க இனத்தவர்களும் இந்தியாவுக்கு வெளியேயில்லை. யாமறிந்த அளவில் அவர்கள் இந்தியாவின் பழங்குடிகளேயாவர்" எனக் கலாநிதி பேக்குயூசன் கூறியுள்ளார். இவருடைய கூற்றைக் கலாநிதி இறையேசனும் வலியுறுத்தியுள்ளார். 'இந்தியாவின் மொழியமைப்புக் கணிப்பு' எனும் நூலில் இறையேசன் பின்வருமாறு கூறியுளார்: திராவிடர்கள் பொதுவாக இந்தியாவிலேயே இன்றேல் தென் இந்தியாவிலே தோன்றியவர்கள் என்றே கொள்ளப்படுகின்றனர். இவர்கள் தென்னிந்தியாவின் பழங்குடிகள் அல்லர் என்பதை அறிவிக்கும் சான்றொன்றுமில்லை." டாக்டர் மாக்லின் என்பவரும் இக்கருத்தையே வெளிப்படுத்தினர்.

இலெமூரியாக் கண்டத்தில் இன்றேல் அதன் ஒரு பகுதியான தக்காணத்தில் வாழ்ந்த பழந்தமிழர் வட இந்தியாவுக்கும் இந்தியாவுக்கு வெளியிலும் சென்று வாழ்ந்தனர். இதனாலேயே கி. மு. 3000 ஆண்டில் மொகஞ்சதாரோ ஆரப்பா எனுமிடங்களிலே மிகச் சிறந்த நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்தனரென அறிகின்றோம். மொகஞ்சதாரோ நாகரிகத்தைக் கொராசு அடிகளார் திராவிடரின் நாகரிகத்துடன் இணைத்துக் காட்டியுள்ளார். திராவிடருக்கு இத்தகைய பழைமையை அளிக்கவிரும்பாத சிலர் மொகஞ்சதாரோ நாகரிகத்தை இன்னும் திராவிட நாகரிகம் என்று முற்றாக ஒப்புக்கொள்ள மறுப்பது விந்தையிலும் விந்தையன்றோ!

"சுதந்திரன்"

"வெறி நாய்!"

" கருணை "

இயற்கை அழுது ஓய்ந்தது. வானத்தின் இதயத்திற்குள் அதுவரை தூங்கிக்கொண்டிருந்த பகலவன் அப்பொழுதுதான் கண் காட்டி நின்றான். வீட்டினுள் தூங்கிக்கொண்டிருந்த 'ஜிம்மி' எழுந்து வந்து அதற்கென மரத்தடியில் போட்டிருந்த சாக்குத் துண்டில் படுத்து உறங்கியது. இயற்கை சிரித்ததின் பலனாக எங்கும் குளிர்மையான ஒரு மோன நிலை சூழ்ந்திருந்தது.

அந்த நேரத்தில் அதோ தெரியும் அந்தச் சந்துமுனையில், இரும்புக் கம்பியால் செய்த வளையங்களைக் பக்கத்தில் அணைத்தபடி, தெருக்களை நோட்டம் விட்டபடி வந்துகொண்டிருந்தான் மாடசாமி. அவனது கண்கள் அதோ அந்த இடத்தில் நிலை குத்தி நின்றுவிட்டன. சுற்றிலும் பார்த்தபடி விரைவாக அந்த இடத்தை நோக்கி நடந்தான். கையில் வைத்திருந்த கம்பிகளில்ஒன்றை எடுத்து இலாவகமாக ஏந்திப் பிடித்து அங்கு படுத்திருந்த ஜிம்மியின் கழுத்தில் மாட்டி இழுத்தான். "பிறர்கையில் அகப்பட்டுக்கொண்டோம்" என்பதையுணர்ந்த அந்த அறிவுள்ள பிராணி, 'லொள்' 'லொள்' என்று கத்தியது. அதை இழுத்துக்கொண்டு அவன் நாலடி நடந்து சென்றபோது, "இந்தாங்க, உங்க ஜிம்மியைப் பிடிச்சிட்டுப் போறாங்க......!" என்று ஒரு சிறுவன் அந்த வீட்டை நோக்கிக் கத்தினான்.

"என்ன...எங்க ஜிம்மியையா...? யாரு? எங்கே...?" என்ற இனிமையான குரல் பதட்டத்தோடு கேட்டது. அதைக்கேட்ட மாடசாமி தயங்கி நின்று திரும்பிப் பார்த்தான்.

பூங்கொடியோ பொன்மயிலோ என ஐயுறும் வண்ணம் அழகுப் பாவையொருத்தி அவனிருந்த பக்கம் விரைந்தோடி வந்தாள். வந்தவள் நின்றவனைப்பார்த்ததும் தாவாக்கொடிபோலத் தயங்கி நின்றாள். அழகான கண்களும் ஆழ்ந்த பார்வையும் எடுப்பான நெற்றியும் சிவந்த மேனியுமாக அமைந்திருந்த அந்த உடலை அழகு செய்வதற்கென்றே அணிந்திருந்தவெண்மையான பனியனும் வேட்டியும் எடுப்பாகத் தோற்றமளிக்க அவன் நின்ற காட்சி அவளைப் பேசவிடாமல் தடுத்து நிறுத்தியது.

கவர்ச்சியான உடல். காண்போரை நிறுத்திவைக்கும் தோற்றம். சிறந்ததோர் சிற்பியின் கை வண்ணத்தால் செதுக்கிய அந்த அழகோவியத்தில் இரு கருந் திராட்சைகளைப் பதித்தது போன்று மின்னிக்கொண்டிருந்தன கண்கள். மாடசாமி தன்னை மறந்து அந்த விழிகளையே பார்த்தவாறு ஆடாமல் அசையாமல் நின்றான். அவன் நோக்கும் அந்தப்பார்வையின் தாக்குதலை அவள் தாங்க முடியாமல் தலை தாழ்த்தினாள். மாடசாமி சுய நினைவு பெற்றான். "நாய் உங்களுடையதா?" என்றான். ஆமாம் என்பதற்கு அறிகுறியாக தலையை மட்டும் ஆட்டினாள். "லைசென்ஸ் இருக்கிறதா?" என்று அவன் கேட்டு நிறுத்தினான். அப்பொழுதுதான் அவள் தன் நிலையுணர்ந்தாள்......இல்லை; இந்தாங்க, நாயை விட்டுடுங்க......!" என்று மடியில் வைத்திருந்த எட்டணாவை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அவள் நீட்டிய கரத்தையே மாடசாமி புன்னகையோடு பார்த்தான். அழகான பசுந்தளிர் போன்ற அந்தக் கையில் ஒருசில இடங்களில் அழுக்குப்படிந்து காணப்பட்டது. வேலை செய்த கையோடு ஓடிவந்துவிட்டாள் என்பதை அது உணர்த்தியது. எனினும், அந்த மென்மையான கரத்தில் அந்த எட்டணா நாணயம் ஊஞ்சலில் தூங்குவது போல ஒய்யாரமாகத் திகழ்ந்துகொண்டிருந்தது. குறும்போடு அதைப் பார்த்தபடி மாடசாமி நின்றிருந்தானே தவிர, அதைத் தொட்டு எடுக்கவில்லை. அவன் குறும்புத்தனத்தை அவள் உணர்ந்து கையை மடக்கிக்கொண்டாள். அவன் புன்முறுவலை நெளிய விட்டபடி "காசு உங்களிடமே இருக்கட்டும். நாய் என்னிடம் இருக்கட்டும்" என்று கூறிவிட்டு ஓரடி நடந்தான். அதைக்கண்ட அவள், "இந்தாங்க; இதுதான் என்னிடமிருக்கிறது, நாயைவிட்டுட்டுப்போங்க!" என்றாள். அதனைக் கூறுவதற்குள் அவளுடைய இரு கன்னங்களும் மாலைநேரத்துச் செவ்வானம்போல சிவந்து மாறியது. அதைக்கண்ட மாடசாமி, இது மாதிரி காசு கொடுத்துத் தப்ப நினைக்காதீங்க...! லைசென்ஸ் இல்லாமல் நாய் வளர்ப்பது பெரிய குற்றம்; தெரியுமல்லவா" என்றான். அவளுக்கோ இனம் தெரியாத வேதனை. அந்த வேதனையிலும் ஒருவித இன்பநாதம் அவளுள்ளத்தில் எழுந்து நரம்புகளைத் தட்டிவிட்டது. செய்வதறியாமல் திணறியபடி நின்றாள். மீண்டும் அவனே, "வீட்டுக்காரர் இருக்கிறார்களா?" என்றான். அவள் இல்லை என்று தலையசைத்துவிட்டு, "நான் வேலைசெய்கிறவள்; அவர்களுக்குத் தெரிந்தால் என்னைத் திட்டுவார்கள்" என்றாள். "அப்படியா, பார்த்தால் அப்படித் தெரியவில்லையே! பாதகமில்லை; அவர்களை வரச்சொல்லுங்கள்!" என்று. சொல்லியபடி நாயை இழுத்துக்கொண்டு நடந்தான்.

இத்தனை நாள் அன்பு செலுத்தி வளர்த்த ஜிம்மி பறிபோகிறதே என்ற பாசம் ஒரு பக்கம் ஏக்கமாக வெளிப்பட்டு அவள் நெஞ்சைக் கனக்கவைத்தது. அங்கேயே சிலை போல நின்று பார்த்துக்கொண்டே இருந்தாள். அவன் நடந்துகொண்டேயிருந்தான். அவன் நடப்பது நடையா......அவள் இதயத்தைப் பறித்துக்கொண்டேயல்லவா ஓடுகிறான். அதற்குள் அவன் போய்விட்டானே என்று சொல்லாமற் சொல்லியது அவள் நெஞ்சம். வளர்ப்புப் பாசமும் — வனப்பான பார்வையும் அவள் இதயத்தில் இருவிதமாகப் பதிந்துவிட்டன. அவளைக்கொல்லாமல் கொன்றுவிட்டு அவள் இதயத்தைப் பிடுங்கிக்கொண்டு சென்றுவிட்டான். துயரம் தாங்கமுடியாத வேதனையாக இதயத்தில் அழுத்த இல்லம் திரும்பினாள்.

மாடசாமி சிறிது தூரம் சென்று திரும்பிப்பார்த்தான். அவள் சென்றுவிட்டாள் என்பதை உணர்ந்து திடுக்கிட்டான். அவளின், குரலினிமையையும் அழகையும் கண்டு மகிழ்ந்து, நாயை வி

விடுவோமா என்று யோசித்தான். கடமை அவனைத் தட்டியெழுப்பியது. "இதுபோன்று லைசென்ஸ் இல்லாத நாய்களைப் பிடித்துக் கொடுக்கத்தான் உனக்கு ஊதியம் தரப்படுகிறது"—என்று அவன் உள்ளுணர்வு கூறியது. நாயைப் பிடித்த கம்பியைச் சுண்டி இழுத்தான். அவன் கால்கள் விரைந்தன. எனினும் அதோ அவளின் உருவம் அவன் மனக்கண்முன் நின்று கெஞ்சியது. கன்னியரின் கடைப்பார்வை காளையர்க்குக்கிட்டி விட்டால்... அப்பப்பா... அந்த இன்ப உணர்வுக்குத்தான் எவ்வளவு ஆற்றல்! காட்டிலே பிறந்து வீட்டிலே மருளும் மான் போன்று அவள் நின்று பேசிய அழகு... அவனை உறுத்தியது. அவன் சிந்தித்தபடியே நடந்துகொண்டிருந்தான்.

அப்பொழுது அவன் பிடித்திருந்த நாய், தான் பிறந்ததிலிருந்து அன்பு செலுத்தியவர்களிடமிருந்து தன்னை இழுத்துப் போகிறான் என்பதை உணர்ந்ததோ என்னவோ 'லபக்'கென்று அவன்மேல் பாய்ந்து அவன் கையில் கடித்துக் குதறியது. இந்தத் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாத மாடசாமி "ஆ" என்றலறிப் பிடியை விட்டுவிட்டான். ஜிம்மி ஒரே ஓட்டமாக ஓடித் தன் வீட்டையடைந்தது. அதே நேரத்தில் வீட்டினுள் நுழைந்த பெரியவர், "ஜிம்மி ஜிம்மி" என்று அழைத்தார். சத்தத்தைக் கேட்ட பூவை உள்ளேயிருந்து வந்து நாயைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். "ஜிம்மி... ஆ... இரத்தம்!" என்று கத்திவிட்டாள். அவள் பதட்டத்தைப் புரியாத அப்பெரியவர், "என்னம்மா, என்னநடந்தது; இது என்ன கம்பி? நாய் பிடிப்பவன் வந்தானா?" என்று கேட்டார். பூவை பதில் கூறாமல் தெருக்கோடியையே பார்த்தாள்.

வலி தாங்கமாட்டாத மாடசாமி கையில் இரத்தம் வழிய ஒரு கையால் தாங்கிப் பிடித்தவாறு மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தான். அதைக் கண்டதும் அவள் மனம் படபடக்க "அப்பா அதோ..." என்று தெருவைச் சுட்டிக்காட்டினாள். பெரியவர் மாடசாமியின் கையில் ஒழுகும் இரத்தத்தைக் கண்டு பதறித், தாவிச்சென்று அவன் கைகளைப் பிடித்து அழைத்துவந்தார். பூவை, அவன் கைகளைப் பார்த்ததும், "ஐயோ; கொதறிவிட்டதே" என்று துடித்தாள். அக்குரல் அவள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து வெளிக்கிளம்பியது. அதற்குள் பெரியவர், "தம்பி உள்ளே வா" என்று அழைத்துச் சென்று அமரவைத்து, "பூவை!" என்றார். அவள் செம்பு நிறைய புளிச்ச தண்ணீரும், விளக்குமாறும் கொண்டுவந்து தந்தையிடம் கொடுத்தாள். அதையெடுத்து, "இதைக் குடி தம்பி" என்று நீட்டினார். மாடசாமி தயங்கினான். அதைக்கண்ட அவர், "சும்மா குடி தம்பி, ஆங்கில வைத்தியம் வருவதற்கு முன்பு இதுதான் நம்நாட்டு மருந்து" என்று சொல்லியபடி அவன் வாயில் செம்பை வைத்துச் சாய்த்தார். மாடசாமி மறு பேச்சுப்பேசாமல் 'மடக் மடக்'கென்று குடித்தான். அதன்பின் 'விளக்குமாற்'றினால் நாய்க்கு அர்ச்சனை செய்யப்பட்டது. மருந்தும்போட்டுக்கட்டிப் படுக்கவைத்தார் பெரியவர். அவை யாவையும் கவனித்தபடி கலங்கிய கண்களுடன் மாடசாமியையே பார்த்துக்கொண்டிருந்தாள் பூவை. அவள் பார்வையில் பரிவு, பாசம், அன்பு யாவும் உருக்கொண்டு பிரதிபலித்தது. அவள் கண்களிலிருந்து இரு முத்துக்கள் கீழே விழுந்து சிதறுவதையும் அவன் கவனிக்காமல் இல்லை; பெரியவரும் அப்படியே.

"இந்தாம்மா பூவை, செம்பை உள்ளே வை" என்று கனிவோடு சொன்னார். அதைக்கேட்ட மாடசாமி திகைத்தான். அவன் வாய் "அப்பாவா...?" என்று கேட்டுக்கொண்டது. "இது உங்கள் மகளா...?" என்று பெரியவரிடம் கேட்டான். "ஆமாம்... ஏன்...?" என்று கேட்டு இருவரையும் பார்த்தார். இதை உணர்ந்த பூவை சிரித்தாள்; அவனும் சிரித்தான். பெரியவர் திகைத்தார். அறிந்தும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், நாய் பிடிப்பவனைப் பூவை நாடுகிறாளே; நானும் வீட்டினுள் அழைத்து இடம் கொடுத்துவிட்டேனே, என்றும் அவர்மனம் எண்ணியது. உடனே மாடசாமியை நோக்கி, "ஏன் தம்பி, இந்த ஆபத்தான வேலைக்குப் போனாய்...? வேறு வேலை கிடைக்கவில்லையா?" என்று கேட்டார்.

இதைக்கேட்ட மாடசாமி, சிறிதும் தயங்காமல் "எங்கே வேலை கிடைக்கிறது! இந்த அரசு உள்ளவரை என்போன்ற ஏழைகளுக்கு, அதிலும் கிராமத்திலிருந்து புதிதாக வந்தவர்களுக்கு யார் உதவியுமின்றித் தகுந்த வேலை கிடைக்கவே கிடைக்காதுங்க! ஆசிரியர் தொழிலுக்குப் போகலாம் என்று நினைத்து எட்டாம் வகுப்புவரை படித்தேன். அதிலும் பள்ளி வைத்து நடத்துபவர்கள் வேலை போட்டுத்தர இந்தப் 'புனித' காட்டில் இலஞ்சம் கேட்கின்றனர். வேலை தேடித் தருவோர் அலுவலகம் பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை. இதற்கு முன் கொஞ்சமாவது வேலை செய்திருந்தால்தான் சலுகை உண்டு என்கின்றனர். இவையெல்லாம் கேட்டு அலுப்புற்ற எனக்கு "இந்த வேலைதான் இருக்கிறது, பார்ப்பாயா?" என்று கேட்டனர். மானம், மதிப்பு, மரியாதை — அப்போது என்னைத் தடுக்கத்தான் செய்தது. ஆனால் இந்த வயிற்றுக்கு இந்தத் தத்துவம் தெரியாதுங்களே! திருடினால் அல்லது பிறரை மோசம் செய்தால் தவறு. எந்த வேலையானாலும் கடமையோடு செய்து உறுதியோடு முடித்தால் தவறு இல்லையல்லவா... இந்த வேலையை என்னவோ திறமையோடுதான் செய்து வந்தேன். ஆனால்......" என்று நிறுத்தி அந்த வீட்டை நோட்டம் விட்டான். அங்கே வள்ளுவர் படம் ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அந்தப் படம், அறையின் நுழைவாயிலின் மேலே மாட்டப்பட்டிருந்தது. உள்ளே கிடந்த சேலைகளும் மற்றவைகளும் அது பூவையின் அறையெனக் காட்டின. அந்த அறைக்குப் பெயர் "தமிழகம்" என முத்துக் கோத்தாற்போல அழகாக எழுதப்பட்டிருந்தது. கணநேரம் அங்கே அமைதி நிலவியது.

மாடசாமி பெரியவரை உற்று நோக்கினான். அவர் எதையோ சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதையுணர்ந்து, என்ன ஐயா யோசிக்கிறீர்கள்? என் வேலையைப் பற்றித்தானே...இதில் வருந்துவதற்கு என்ன இருக்கிறது; போதுமான ஊதியம், நல்ல ஓய்வு; மானமான வாழ்வு; இன்னும் சொல்லப்போனால் இந்த வேலை செய்வற்கே பெருமைப்படுகின்றேன்"—என்று உணர்ச்சியோடு கூறினான்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 / இல்லம் ...118

அவர் முகத்தில் சிந்தனை ரேகைகள் படர்ந்தன. உள்ளத்தில் எண்ண அலைகள் வேதனையாகக் கை கொட்டிச் சிரித்தன—என்பதை அவர் கண்ணிலே படர்ந்த ஒளி தெளிவாக எடுத்துக் காட்டியது "தம்பி; உன்னைத் தவறாக எண்ணிவிட்டேன், மன்னித்து விடு. நானும் உன்னைப்போலக் கீழான நிலையிலிருந்து வந்தவன் தான். இந்தச் சமுகம் நல்லவர்களை வாழ விடுவதில்லை. என் மகள் பூவையை மணந்துகொள்! மற்றப் பெண்களைப்போல் அடுப்போடு நின்றுவிடாமல், நம் நாடு, நம் மொழி, நம் கலாச்சாரம் ஆகியவைகளைப்பற்றித் தெரிந்தவள். சீர்திருத்தக் கருத்துக்கள் நிரம்பியவள். பொல்லாங்குக்காரர்கள் அவளைப்பற்றி எழுதியதைப் பார்!" என்று அவனிடம் ஒரு கசங்கிய அஞ்சலட்டையைக் கொடுத்தார். அதில் படிக்கக் கூடாத கீழான நடையில் அவளைப்பற்றி எவனோ ஒரு கோழை ஏதேதோ எழுதியிருந்தான். அதைக் கண்ட மாடசாமிக்கு என்றுமில்லாத ஒரு துடிப்பு ஏற்பட்டது. இடக்கிறார்கள் கையாலாகாதவர்கள், விட்டுவிடுங்கள்! அரசாங்கத்தில் என்னைப் போன்றவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுத்து 'லைசென்ஸ்' இல்லாத நாய்களைப் பிடிக்கச் சொல்கிறார்களே தவிர, சமுதாயத்தில் இது போன்று நெளியும் வெறி நாய்களை விட்டுவிடுகிறார்கள். உங்களைப் போன்ற பெரியவர்கள் தங்களைக் கடிக்க வராதவரை நமக்கென்ன என்று இருந்துவிடுகிறார்கள். அதனால் வெறி நாய்களின் 'பேயாட்டம்' அதிகமாகிறது; என்று இது தொலைகிறதோ, அன்றுதான் நமது சமுதாயம் முன்னேறும்" என்றான்.

"தம்பி! உன்னைச் சாதாரணமானவன் என்று நினைத்தேன், நீ கூறியது அத்துணையும் உண்மை. நானும் நமக்கென்ன என்றுதான் இருந்தேன். ஆனால் இன்று முதல் நானும் சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதையுணர்ந்தேன்"—என்று நிறுத்திவிட்டு "பூவை" என்றார். அவள் ஓடி ஒளிந்துகொண்டாள்.

வீதியிலே எங்கோ ஒரு வெறி நாய் குரைத்தது. ஆனால் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ●

★ பெரிய சதி ★

[ச. ஜெகநாதன்]

கிடைத்தற்கரிய ஒரு ஆற்றல் மிக்க பெரியவரால் பூமிதானம்" என்னும் அன்புப் புரட்சி கடந்த பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இத்தனை மகத்தான மாபெரும் இயக்கத்தை நம் நாட்டில் நிலச்சுவான்தார்களும் அரசாங்கமும் எவ்வாறு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்? நிலப்பிரபுக்கள் அரசாங்கத்தில் அமர்ந்திருப்பதால் இரண்டின் போக்கிலும் ஒரே சாயலைத்தான் பார்க்கிறோம்.

பலர் டம்பத்திற்கு, புகழுக்கு, டமாரம் அடிப்பதற்கு மூன்று இலக்கங்களில் ஏன் நான்கு இலக்கங்களிலும்கூட ஐயாயிரம் பத்தாயிரம் ஏக்கர் என்று தானம் வழங்கினார்கள். இவைகளில் உருப்படியான தானங்கள் மிகச் சொற்பம்.

பெரிய தானங்களின் சிறுமை மானக்கேடான விஷயமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இருநூறு, ஐந்நூறு, ஆயிரம் என்று கொடுத்த தானங்கள் உருப்படியாகவில்லை.

தமிழ் நாட்டிலேயே நிலப்பிரபுக்களின் இலட்சணம் இதுவென்றால், மற்ற மாகாணங்களில் எவ்விதமிருக்கும் என்று என்னால் சொல்லமுடியாது.

இதே நிலப்பிரபுக்கள் குடிபுகுந்திருக்கும், அரசாங்கமும் வேறு எவ்விதத்தில் பூமிதான இயக்கத்தை வரவேற்றிருக்க முடியும்? காந்திஜியே தன் இறுதிக் காலத்தில் மனம் உடைந்து நொந்து புண்ணாகும்படி நடந்துகொண்ட ஆட்சியாளர்களுக்கு வினோபாபாவே எம்மாத்திரம்? காந்திக்குக் காட்டிய பக்தியும் வணக்கமும் வினோபாவிற்கு போகுமிடங்களெல்லாம் மந்திரிமார்களும், அவர்களின் கூட்டாளிகளும் கொடுக்கத்தான் செய்தார்கள். ஆனால் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விட்டார்கள். தங்கள் தொகுதிகளில் வினோபாவை மாலைமரியாதையுடன் வழியனுப்பிவிட்டு அரசாங்கபீடத்திலும் தங்களின் சொத்துக்களைப் பாதுகாத்துக்கொள்ள ஏழைகளின் பெயரால், சட்டமும் இயற்றிக்கொண்டார்கள். உச்சவரம்பு கட்டும் சட்டம் கொண்டுவருவதாகப் பாசாங்கு செய்துகொண்டே தங்கள் நிலங்களைப் பிரித்துக்கொண்டார்கள். கோடானுகோடி மக்கள் அரைப் பட்டினி கிடக்கும் இந்நாட்டில் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் உச்சவரம்பு என்று கண்துடைப்புச் செய்துகொண்டார்கள். கரும்பு, ஏலம், காப்பி முதலியவைகளின் மூலம் பணம் குவிப்பதற்காக இவைகளைச் சட்டத்திலிருந்து விதிவிலக்குச்செய்துகொண்டார்கள். இது, நிலம், உழுபவனுக்குச் சொந்தமாக வேண்டுமென்ற காந்திஜிக்கும், அவர் வழிவந்த வினோபாவிற்கும் கோடானுகோடி விவசாயிகளுக்கும் செய்த பெரிய சதியாகும்.

—"தாயகம்"

காஞ்சீபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.